

# தமிழரசு

1-9-1993 ரூ.3



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து

**காதி கிராப்ட்**

அங்காடிகளில் கிடைக்கும்



DIPR/273/Dis/MS/937

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



# இந்த இதழில்...


ஜெயங்கொண்டத்தில் ரூ.7,000 கோடியில் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டம் ... 2

மக்கள் நலன் காக்கும் அரசு ... 5

படமும் செய்தியும் ... 9

பர்கூரைச் சேர்ந்த 696 குடும்பத்தாருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 13

பகுத்தறிவுப் பாதுகாவலர் பேரறிஞர் அண்ணா! —மாண்புமிகு முதல்வர் ... 15

விளையாட்டு வீராங்கனை அமுதாவுக்கு தமிழக முதல்வரின் ஊக்கப் பரிசுகள் ... 16

எண்ணம் கவரும் வண்ணப் பறவைகள்! ... 17

நீலப்புரட்சி ஏற்பட நித்தம் பணியாற்றுவோம்! ... 19

காவிரி ஏன்? கங்கையும் இங்கு வரும்! ... 23

சென்னை மாநகரில் மகளிர் காவல் நிலையங்கள் ... 24

கல்பாக்கம் அணுமின் நிலையம் ... 29

வளரும் வேளாண்மை ... 32

மத நல்லிணக்க நாள் விழா ... 33

உலகச் சுற்றுலா நாள் முன்னேற்பாடுகள்! ... 36

தமிழ்த் தென்றல் திரு.வி.க. ... 37

சென்னை மாநகராட்சிச் செய்திகள் ... 39

சென்னையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா ... 41

ஏழ்மை நிலையிலும் ஏற்றம் பெற... ... 43

இராமநாதபுரம்: குடிநீர்ப் பிரச்சினை தீர... ... 45

வேளாண்மைத் துறை மூலம் விரைவான பணிகள் .. 47



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆவணித் திங்கள் - 16

மலர்: 24 இதழ்: 5

1-9-1993

விலை: ரூ. 3


## அண்ணாவின் அன்புத் தத்துவம்!



குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பது போல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பது போல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வர வேண்டும் என்பதே அமரர் அண்ணா அவர்களின் அன்புத் தத்துவம்.

அண்ணா அவர்களிடம் சிந்தனை ஆற்றல் மட்டுமல்ல; அதன்படி செயலாற்றும் ஆற்றலும் நிறைந்திருந்தது. அதற்கு அவருடைய சொல்லாற்றல் பேருதவி செய்தது.




ரூ.7,000 கோடியில் கூட்டுத்துறையில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஜெயங் கொண்டம் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டத்திற்கான ஒப்பந்தம் 27.8.1993 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

இது குறித்துத் தமிழ்நாடு அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி, மின்சார உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான கூட்டு முனைவோர் ஒப்பந்தம். தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், மெக்நல்லி பாரத்




# ஜெயங்கொண்டத்தில் ரூ.7,000 கோடியில் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டம்

## மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்

எண்டர்பிரைசஸ் மற்றும் 4 ஜெர்மன் கம்பெனிகள் ஆகியவற்றிற்கிடையில் கையொப்பமிடப்பட்டது (27.8.1993).

இந்த ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி, டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப் பட்டது.

ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டபோது, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், மாண்புமிகு





தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி, சென்னையிலுள்ள ஜெர்மன் நாட்டுத் தலைமைத் தூதர் டாக்டர் வோஹல், வில்லியம்ஸன் அன் மேஜர் கம்பெனியின் தலைவர் திரு பி.எம்.கைத்தான், பிர்லா குரூப் கம்பெனிகளின் துணைத் தலைவர் திரு சி.கே. பிர்லா, 'ஸீமென்ஸ்', 'மான்', 'டெயூட்டி' 'பாப்காக்' ஜெர்மன் நாட்டு டாக்ராப் கம்பெனி ஆகியவற்றின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட் ராமன், மின்சார வாரியத் தலைவர் திரு என். ஹரிபாஸ்கர் மற்றும் மூத்த அலுவலர்கள் ஆகியோர் இருந்தனர்.

**ஒப்புதல் மெமோரண்டம்**

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஜெயங் கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக் கார்ப்பரேஷன் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்புதல் மெமோரண்டம் ஒன்றும் கையொப்ப மானது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மின்சார விநியோக நிலைமை குறித்து ஆய்வு செய்தபோது, அவர், மின்சார உற்பத்திக்கான தொலைநோக்குத் திட் டங்கள் உருவாக்கப்படாவிட்டால், மின்சாரப் பற்றாக்குறை காரணமாகத் தொழில்துறை வீழ்ச்சி அடையும் என்பு[illegible]ணர்ந்தார்.

**புரட்சித்தலைவி ஆர்வம்**

தமிழ்நாட்டில் நிலக்கரிப் படிவங்கள் இல்லாத தையும், பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் உள்ளதை யும் உணர்ந்து, பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான தொலைநோக் குத் திட்டங்களை மேற்கொள்வதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்திய அரசைத் தொடர்பு கொண்டு, தனியார் துறையில் மின்சார உற்பத்தி செய்வதற்கான அனுமதி பெறுவதற்கு மூல காரணமாக அமைந்தார்கள்.

**தனியார் துறையில் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல்**

மின்சார உற்பத்தியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் காட்டிய அக்கறையின் காரணமாக, மின்சக்தி குறித்த முதலீட்டை அதிகரிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகையில், வருங்காலத்தில் கூடிவரும் பெருமளவு மின் தேவையைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தியில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்கும் வண்ணம் ரூ.12 ஆயிரத்து 600 கோடி அளவில் 3,300 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்துறையில் ரூ.7 ஆயிரம் கோடி முத லீட்டுடன் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மின் உற்பத்தித் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்தில், ஜெயங்கொண்ட சோழ புரத்தில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதும் அடங்கும். இதன் மூலம், ஒவ்வொன்றும் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் 3 மின் உற்பத்தி நிலையங்களுக்குப் பழுப்பு நிலக்கரி கிடைக்கும். இத்திட்டத்தின் இறுதிச் செலவு சுமார் ரூ.7,000 கோடியாக இருக்கும்.

ஒப்பந்தம் கையொப்பமிடும் நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி னார்கள்.

நாட்டிலேயே முதன் முதலாகத் தனியார் முதலீட்டின் உதவியுடன் தொடங்கப்படும் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தித் திட்டமாக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்தினைச் செயல்படுத்து வதில் அரசு கொண்டுள்ள அக்கறையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

''இங்கு நமது நாட்டின் புகழ் பெற்ற தொழில் அதிபர்களும், ஜெர்மனி நாட்டுத் தொழில் முன்னோடிகளின் பிரதிநிதிகளும் வந்திருப்பதே ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சாரத் திட்டத்தின் வெற்றியை முன்னதாக அறிவிக்கிறது.

என்னைப் பொறுத்தமட்டில் இந்த நிகழ்ச்சி ''கனவு நனவு ஆகிறது'' என்பதையே குறிக்கிறது.

2 ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்தத் திட்டத்தை உருவாக்கியபோது, பல தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவது, மின்சார உற்பத்தி என்ற இரு பெரிய, ஒருங்கிணைந்த திட்டத்ததைத் தொடங்குவதற்குத் தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் நிதிக் காரணங்களால் பல சங்கடங்கள் ஏற்பட்டன.

## தொழில் கொள்கை

சுரங்கத்துக்குத் தனியார் துறைக்கு அனுமதி வழங்குவதைப் பொறுத்தமட்டில் இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசாங்கத்தின் தொழில் கொள்கையிலே ஒரு மாற்றம் தேவைப்பட்டது. மேலும், மத்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் தாராளமயமாக்குதலை எதிர்நோக்க முடியாமல் இந்தியாவிலும் மற்றும் வெளி நாடுகளிலும் உள்ள பல பெரிய தொழில் நிறுவனங்கள் இத்தகைய திட்டங்களில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஒன்றன் பின் ஒன்றாக இருந்த பிரச்சினைகளை நாங்கள் தாண்டி வந்தோம்.

உண்மையில் ஜெர்மனி நாட்டில் உள்ள தொழில் முன்னோடிகள் இந்தத் திட்டத்தில் பங்கு கொள்ள முன்வந்திருப்பது எங்கள் பொருளாதாரம் சிறப்பாக இருப்பதில் அவர்கள் நம்பிக்கை வைத்திருப்பது மட்டுமல்லாமல், இவ்வளவு பெரிய திட்டத்தை நடத்த எங்களுக்கு இருக்கும் திறமையைப் பற்றி அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது.

உங்கள் நம்பிக்கை முற்றிலும் நியாயமானது என்பதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். தொழில் வளர்ச்சி, தொழில்நுட்பக் கல்வி, தொழில் அடிப்படை வசதிகள் வளர்ச்சி, தொழில் வளர்ச்சிக்கான உகந்த சூழ்நிலையில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது.

## சட்டம்-ஒழுங்கு

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் எங்களின் மேம்பாட்டு முயற்சிகளில் பங்கு பெற முதலீட்டாளர்களை ஈர்க்க இங்கு அரசியல் ஸ்திரத்தன்மையுடன், நல்ல முறையில் உள்ள சட்டம்-ஒழுங்கு நிலைமையே போதுமானது.

நாங்கள் தொழில் முறையில் மிக வேகமாக முன்னேறிச் செல்ல விரும்புகிறோம். ஆனால், மின்சார சப்ளைதான் மோசமாக இருக்கிறது. நீர் மின்சார ஆதாரங்களை அநேகமாகப் பயன்படுத்திவிட்டோம்.

நமது மாநிலத்தில் எதிர்கால மின்சார உற்பத்தி அனல் மின்சார மற்றும் அணு மின்சாரத்தைச் சார்ந்துதான் இருக்கிறது.

அனல் மின்சார நிலையங்களைப் பொறுத்தமட்டில் தொலை தூரங்களிலிருந்து, நிலக்கரியைக் கொண்டுவர வேண்டியிருப்பதால் இங்கேயே கிடைக்கும் பழுப்பு நிலக்கரியையே நாம் அதிகமாகச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

எனவேதான் மின்சார உற்பத்திக்காக நமது மாநிலத்தில் உள்ள பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சாரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அதிக முன்னுரிமை கொடுக்க விரும்புகிறேன்.

பழுப்பு நிலக்கரி ஆதாரங்களை எடுப்பது இது வகையில் மத்திய அரசாங்கத்தின் தனிப்பட்ட அதிகார வரம்புக்குள்ளேயே இருந்தது. நான் இந்தப் பிரச்சினையை எடுத்துத் தொடர்ந்து செய்த என் முயற்சியின் விளைவாகப் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கு மாநில அரசுகளுக்கும், தனியார் துறைக்கும் அனுமதி வழங்கும் திட்டத்துக்கும் மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தி என்ற 2 பணிகளிலும் தனியார் துறையையும் ஊக்குவிக்க முடிவு செய்தோம். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பி.எம். கைத்தனையும் மற்றவர்களையும் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கூட்டுறவுத் துறையில் இந்தத் திட்டத்தை வளர்க்க முடிவு செய்தது.

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம் நாட்டிலேயே இதுபோன்ற நிறுவனங்களில் மிகச் சிறந்ததாகும்.

பிரம்மாண்டமான மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சார உற்பத்தியிலும், விநியோகத்திலும் சிறந்த சாதனையைப் படைத்துள்ளது.

ஜெயங்கொண்டம் பழுப்பு நில்க்கரி உற்பத்தி மின்சாரத் திட்டம் ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டம் என்று அறிகிறேன். இந்தத் துறையில் ஒங்கிணைந்த வளர்ச்சியை வழங்கும் முதல் திட்டமாகும் இது.

தனியார் துறையையும் ஈடுபடுத்தும் புதுமையான முறையில் இது திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சில பிரச்சினைகள் வரலாம். பங்குதாரர்களிடையே உள்ள நல்லெண்ணம், இந்தத் திட்டத்தில் உள்ள உறுதி ஆகியவற்றால் அந்தப் பிரச்சினைகளை நாம் விரைவில் தீர்த்துவிடலாம்.

உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். இந்தத் திட்டத்தில் மிக உறுதியாக உள்ள மாநில அரசு இந்தத் திட்டம் வேகமாக நிறைவேற்றப்படத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும்.

மேற்கண்டவாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.



# மக்கள் நலன் காக்கும் அரசு

## கோவை மாவட்டம் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

முதல் அட்டை சொல்லும் செய்தி:



மக்கள் சக்தியின் பேராதரவோடும், நல் வாழ்த்துக்களோடும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பேற்ற, உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு, முனைப்புடன். மக்கள் பணியாற்றி வருகிறது என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். மக்களாட்சியின் மாட்சிமையைப் பெரிதும் மதித்து, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதிலும், 'மக்கள் தான் இறுதி எஜமானர்கள்', என்ற ஜனநாயகக் கோட்பாட்டிலும், நம்பிக்கை வைத்து உள்ள நாங்கள், ஐந்தரைக் கோடி தமிழக மக்களின் எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும், ஏற்றார்போல இயங்கி வருகிறோம் என்பதை, நாடும் அறியும், நல்லவர்களும் அறிவார்கள்.

சில தேச விரோதச் சக்திகள், சமூக விரோதச் சக்திகள், வன்முறையாளர்கள், ஆகியோரது கொடிய பார்வை, என் மீது படிந்துள்ளது என்ற உண்மையை, நான் நன்கு அறிந்து இருந்த போதிலும், எனது அன்பிற்குரிய மக்களைச் சந்திக்காமல் இருக்க முடியாது என்ற காரணத்தால் தான், என் உயிரையும் பொருட்படுத்தாது, நான் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சென்று, ஒவ்வொரு மாவட்டத்திலும், கோடிக் கணக்கான ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி



வைத்து, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, நானே எனது கைப்பட, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி வந்திருக்கிறேன்.

மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், பல பிரகடனங்களை அறிவித்துக் கொண்டிருப்பதை விட, பல்வேறு நலத்திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற, ஏழை எளிய மக்களுக்கு, அத்திட்டங்களின் பலன் சென்று அடைகிறதா என்பதைக் கண்காணிப்பதில், ஆழமான நம்பிக்கை கொண்டு உள்ளது எங்கள் அரசு. அதன் அடிப்படையில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெற்று. தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள, துடித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரிவினர்களிடமிருந்து, மனுக்களை நேரில் பெற்று, துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உன்னதமான நல்லெண்ணத்தில், சென்ற ஆண்டு ஒவ்வொரு திங்கட் கிழமையையும், குறிப்பிட்ட மாவட்டத்திற்கு என ஒதுக்கி, பொது மக்களிடமிருந்து குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்று, நடவடிக்கை எடுத்தேன்.

''பொதுமக்கள் குறை தீர்ப்பது'' என்பது, சாதாரணப் பணியாகக் கருதாமல், அதில் தனிக் கவனம் செலுத்தி, மக்களுடைய குறைகளைக் களைய வேண்டும் என்று, அதிகாரிகளுக்கு ஆணைகள் இட்டதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு துணை ஆட்சியர், Deputy Collector அந்தஸ்த்தில், இதற்காக ஒரு தனி அலுவலரை நியமித்து, குறை தீர்க்கும் பணிக்கு, ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளேன். என்னிடம் அளவிட முடியாத நம்பிக்கையும், பேரன்பும் கொண்டுள்ள, பல லட்சக்கணக்கான சகோதர சகோதரிகள், என்னிடம் மனுக்களை வழங்கினார்கள். நானும் பல மணி நேரம், அவர்களை நேரில் சந்தித்து, குறை



# மருத்துவ நலத் திட்டம்



மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

எனினும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. திட்டங்களை நிறைவேற்றும் அணுகுமுறையில், செயல்பாடுகளிலும், நாம் மேலும் முன்னேற்றம் காண்பது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமாகிறது.

தொழுநோய், காசநோய், கண்நோய் போன்றவை, தமிழக மக்களை அதிகமாகப் பாதித்து வருகின்றன. இந்த நோய்களைத் தீர்க்க, கிராம மக்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொண்டுதான் கிராம மக்களுக்காக, அவர்கள் இருக்கும் இடத்திலேயே மருத்துவ வசதிகள் செய்து தருவது என்கிற எங்கள் இலக்கினை அடைய, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் மருத்துவர்களைக் காண்பது அரிது என்றிருக்கும் அவல நிலையைப் போக்கிடும் வகையில், பல்வேறு மருத்துவத் துறையில் உள்ள நிபுணர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி, பரிசோதனை வசதிகள் செய்து கொடுத்து, மருத்துவ வசதிகளைப் பரவலாக்கிட இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் இன்னதென ஆராய்ந்து, நோயின் காரணங்களை அறிந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, அந்த வழிகள் உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும். வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் சுட்டிக் காட்டியதற்கு, இம் மருத்துவ நலத் திட்டம் உரிய வகையில் செயல் வடிவம் தரும்.

களையும் கேட்டேன், மனுக்களையும் பெற்றேன். பல்வேறு அரசு நலத்திட்டப் பலன்கள், மக்களுக்கு நேரடியாகச் சென்று அடைவது இல்லை என்று, சிலர் குறை கூறி வந்ததால், என்னிடம் மனுக்களை அளித்த மனுதாரர்களுக்கு, நியாயமான முறையில், அரசு நலத்திட்டப் பலன்கள், சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தில், அரசாங்கத்தின் செலவில், மனுதாரர்களைச் சென்னைக்கு நேரில் வரவழைத்து, உதவிகளை நானே வழங்கும் புதிய நடைமுறையைச் செயல்படுத்தினேன்.

23.3.1992 அன்று, மாவட்ட வாரியாக மனுக்களைப் பெற ஆரம்பித்து, 20.7.1992 முடிய, ஒரு சுற்று எல்லா மாவட்ட மக்களிடமிருந்தும், மனுக்களைப் பெற்று, அம்மனுக்களை விசாரணை செய்து, 36,438 தகுதியுடைய மனுதாரர்களை, 13.7.1992 முதல், 2.11.1992 வரை, பல நாட்களில் வரவழைத்து, 52 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை, நேரில் வழங்கியுள்ளேன்.

இரண்டாவது கட்டமான தற்போது, மீண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்கள் மீது, விரைந்து நடவடிக்கை எடுத்து, அரசு நலத்திட்ட உதவிகளை, நானே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று வழங்குவதற்கு, ஒரு திட்டம் தீட்டினேன்.

அந்தச் சிந்தனையின் செயல்பாடு தான், இன்று கோவை மாவட்டத்தில், 6,200 பேருக்கு, அரசு நலத்திட்ட உதவிகளை, மனமகிழ்ச்சியுடன் வழங்க வந்துள்ளேன். மக்கள் நலன் காக்கும் அரசாக, ஏழை எளிய மக்கள், மற்றும் நலிந்த பிரிவினர்களின் நலனைக் காக்கும் அரசாக, சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையுடன், நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இன்று வழங்க உள்ள உதவிகளை, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் வழங்க வேண்டும், என்று நான் விரும்பினாலும், நேரம் இன்மையால், 100 பேருக்கு மட்டும், உதவிகளை நானே வழங்க உள்ளேன். மற்றவர்கள் அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், எனது முன்னிலையிலேயே வழங்குவார்கள். இந்த விழாவில் உதவிகளைப் பெறும், எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகள், தங்கள் வாழ்க்கையில், மேலும் பல முன்னேற்றங்களை அடைந்து, சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்று, எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.






## கோவை மாவட்டத்தில்

# நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

**கோ**வை மாவட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கோவை நகரிலுள்ள வ.உ.சி. பூங்கா மைதானத்தில் 20.8.1993 அன்று காலை நடைபெற்றது.

விழாவில் கலந்து கொள்வதற்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 20.8.1993 அன்று காலை 11.45 மணிக்கு மேடைக்கு வந்தார். உடனே அங்கு கூடியிருந்த மக்கள் 'புரட்சித் தலைவி வாழ்க' என முழக்கமிட்டபடி, முதல்வர் அவர்களை வரவேற்றனர். மேடையில் ஏறிய முதல்வர் அவர்கள் அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்து வணங்கி வரவேற்பைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து, சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசினார்.

விழாவில் சுமார் ரூ.3 கோடியே 10 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் 6,212 நபர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் 100 நபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கினார்.

கால் ஊனமுற்றவர்களுக்குச் சக்கர நாற்காலிகள், பெண்கள் சுயதொழில் தொடங்க செயற்கை வைரம் கட்டிங் இயந்திரம் போன்றவைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து முதல்வர் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப. அவர்கள் மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

விழா முடிவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். விழாவினையொட்டி சேரன் போக்கு வரத்துக் கழக இசைக் குழுவினர் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர், கோவை காந்திபுரம் காட்டூர் காவல் நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இது தமிழ்நாட்டில் அமைக்கப் பட்டுள்ள மூன்றாவது மகளிர் காவல் நிலையமாகும். பின்பு, காவல் நிலையத்துக்குச் சென்று குத்துவிளக் கேற்றி, காவல் நிலையத்தைப் பார்வையிட்டார். முதல்வர் அவர்களுடன் தமிழகக் காவல்துறைத் தலைவர் திரு ஸ்ரீபால், இ.கா.ப. அவர்களும் இந்த விழாவில் கலந்துகொண்டார்.

பின்னர், இந்த மகளிர் காவல் நிலையத்தில் இருந்த குறிப்பேட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் குறிப்பு எழுதினார்.

I am very happy to be able to inaugurate this All-Women Police Station in Coimbatore, the first of its kind in this City, and the third All Women Police Station in the State of Tamil Nadu.

The first All Women Police Station was inaugurated at Madras in April, 1992. It has been functioning successfully for over a year now. It has proved to be immensely popular among the women, and the tremendous reception it has received has inspired me to announce the establishment of similar All Women Police Stations all over the State.

I have no doubt that this All Women Police Station will also prove to be a great success and that the Inspector, staff and personnel of this Police Station will acquit themselves creditably in the performance of their duties, fulfilling the expectations of the public, in particular women, and bringing honour and glory to the Tamil Nadu Police Force.

# படமும் செய்தியும்



கப்பற்படை தலைமைத்தளபதி எல். ராம்தாஸ், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாற்றினார். திருமதி ராம்தாஸ் அவர்களும் அப்போது உடனிருந்தார் (13.8.93).




தென்னிந்தியாவின் அமெரிக்கத் தூதர் திமோதி ஹௌசர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, 'அமெரிக்கா' என்னும் புத்தகம் ஒன்றைப் பரிசாக அளித்தார் (18.8.93).



சென்னையில் உள்ள ஜப்பானியத் தூதர் திரு டாட்செள இஷிஜாகி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (18.8.93).

இந்திய யூனிசெப் (UNICEF) பிரதிநிதி டாக்டர் ஜான் எலியட் ராப்டே மற்றும் யூனிசெப் (UNICEF) தலைவர் செல்வி கின் சர்தானி லூயின் அவர்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து உரையாடினார்கள்.





வில்லியம்சன் அண்டு மேஜர் கம்பெனியின் தலைவர் திரு பி.எம். கைத்தான், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தி கார்பொரேஷனுக்கும் இடையிலான ஒப்புதல்மெமோரண்டத்தில் கையொப்பமிட்டு தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார் (27.8.1993).



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ.5 இலட்சத்தை மானியமாக 27.8.1993 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

**TNPSC**

விளம்பர எண்.32/93

**தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் காப்பு மருந்துப் பணியில் நல்வாழ்வு அலுவலர் (Health Officer)** பதவியில் ஒன்பது காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 27.9.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன. (இக்காலியிடங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்களுக் குரிய நிலுவையிலுள்ள காலியிடங்களாகும்).

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200

**குறிப்புகள்:** (1) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினி யிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

(2) 7.4.1993 நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இப்பதவிக்குரிய 16 **காலியிடங்களுக்கும் மற்றும் தற்போதைய மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்களுக்குரிய 9 நிலுவையிலுள்ள** காலியிடங்களுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த தேர்வாக நடத்தப்படும்.

(3) 7.4.1993 **நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கைக்கிணங்க ஏற்கெனவே இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட** விண்ணப்பித்து, அவர்களின் விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள பட்சத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் **மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத்** தேவை இல்லை.

**வயது:** 1.7.1993 **அன்று** 35 **வயதிற்குக் குறைவாக.**

NOTE: (i) சலுகை

| தகுதி | சலுகை |
|---|---|
| Degree Holders | No age limit. |
| Diploma Holders | No age limit if they have obtained the Diploma after passing Pre-technical Course/ P.U.C./H.S.C. The prescribed age limit will be increased by five years in respect of Destitute Widows, who have obtained the Diploma after passing S.S.L.C. |

(Some more concessions are given below)

(ii) The period of service rendered by a candidate as short Service/Regular Commissioned Officer in the Army Medical Corps will subject to a maximum period of five years be excluded in computing his age.

**QUALIFICATION AS ON 27.8.1993:** (The following or its equivalent) B.S.Sc. degree or the Diploma in Public Health of the University of Calcutta.

or

A certificate of having undergone a special course of training in Sanitary Science in the Medical College, Madras for a period of not less than one year and of having passed the examination for Licenciate in Public Health held at the end of that course.

or

If fully qualified candidates are not available up to the number required applications from candidates possessing the M.B.B.S. degree or from candidates possessing the Diploma in Medicine and Surgery or the Diploma of L.M.P. granted by the Board of Examiners, Medical College, Madras will be considered for selection subject to certain conditions.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் தாயகம் திரும்பியவர்கள் (பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் தவிர) முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் **குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்ற** வர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக் கான விதிமுறை''-களில் தரப்பட்டுள்ளன. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த தாயகம் திரும்பியவர்கள், (பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களைத் தவிர) முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை''-களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், **சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது** ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.8.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய, செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.8.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 பணிக்கிளை (Service Branch) சென்னை-(8443) பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான **(ரூபாய் 10) குறுக்குக் கோடிட்ட ''வங்கிக் கணக்கு வைத்துப் பணம் பெறுபவர்'' 'கேட்புக் காசோலை'** (Account Payee - Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.



DIPR/1486/MS/93



பர்கூரைச் சேர்ந்த 696 குடும்பத்தார்க்கு

# மாண்புமிகு முதல்வர் உதவி!

பின் தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய வேண்டும் என்பதற்காகப் பர்கூர் நகரில் தொகுதி அலுவலகம் ஒன்றைத் துவக்கி, அதன்மூலம் தொகுதி மக்களின் மனுக்களைப் பெற்று வருகிறார். அந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தாமே நேரடியாகப் பரிசீலனை செய்து, அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பிவைத்து அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்.

எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தெரிந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து பொருட்களை வாங்கியும், நிதியாக வழங்கியும் வருகின்றார்கள். இதுவரை 563 நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதியுதவிகளாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

24.8.1993 அன்று, மேலும் 133 நபர்களைத் தனது இல்லத்திற்கு நேரில் வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து, பெட்டிக்கடை வைக்க 20 நபர்களுக்கும், காய்கறிக்கடை வைக்க 5 நபர்களுக்கும், துணிக்கடை வைக்க 7 நபர்களுக்கும், ஆடுகள் வளர்க்க 6 நபர்களுக்கும், கோழி வளர்க்க ஒருவருக்கும், சிறு தொழில் தொடங்க உதவி கோரிய 33







நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

மேலும் - திருமணம் செய்வதற்காக நிதியுதவி கோரிய 8 நபர்களுக்கும், வீடு கட்ட உதவி கோரிய 3 நபர்களுக்கும், மருத்துவச் சிகிச்சைக்கான உதவி கோரிய 8 நபர்களுக்கும், உடல் ஊனமுற்ற 9 நபர்களுக்கும் நிதி உதவி வழங்கினார்.

மேலும் 10 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகளையும், ஒவ்வொருவருக்கும் ஒரு மாட்டு வண்டி; ஒரு ஜோடி காளை மாடுகள் வீதம் 11 நபர்களுக்கும், 6 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 2 ஊனமுற்ற நபர்களுக்கு மூன்று சக்கர வண்டியும், ஒரு நபருக்கு சைக்கிள் ரிக்ஷாவும், 3 நபர்களுக்கு சைக்கிள் கடை வைக்க தலா 6 சைக்கிள்களும் மற்றும் கடை நடத்தத் தேவையான உபகரணங்களையும் வழங்கினார்.

இத்துடன் தனது பர்கூர் தொகுதியில் வசிக்கும் 696 ஏழைக் குடும்பங்களுக்குத் தம்முடைய சொந்தச் செலவிலிருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நிதியுதவியினை வழங்கியுள்ளார்.

## அண்ணா போற்றிய பெருமக்கள்



### பாவேந்தர் பாரதிதாசன்

“பாரதிதாசன் தரும் இலக்கியச் சுவையை அனுபவிக்க இலக்கணம் கற்றிருக்க வேண்டியது இல்லை. பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நம் இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கின்றன. உணர்ச்சி நம் நரம்புகளிலே ஊறுகிறது; சுவைத்தால் ருசிக்கிறது.

படிக்கிறோம்; பாரதிதாசன் ஆக நாமே ஆகிறோம்.

படிக்கிறோம்; நாமும் பாடலாமா என நினைக்கிறோம்.

படிக்கிறோம்; ‘தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ என்கிறோம்.”

செப்-15. அண்ணா பிறந்த நாள்:



# பகுத்தறிவுப் பாதுகாவலர் பேரறிஞர் அண்ணா!

## -மாண்புமிகு முதல்வர்

'அண்ணா' என்கிற அந்த மூன்றெழுத்து மந்திரத்தின் சக்தி உலகளாவி உள்ளது என்பதை இன்றும் எவரும் மறுக்க முடியாது. இந்த ஆழமான பற்றுதலுக்கும், அன்பிற்கும் பல காரணங்கள் உள்ளன. அண்ணா அவர்களின் செயல், பேச்சாற்றல், சகிப்புத் தன்மை, கொள்கைப் பிடிப்பு, பகுத்தறிவுப் பற்று, அறிவாற்றல், பொதுநோக்கு, சகோதரத்துவம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், இவற்றிற்கு எல்லாம் மேலாக மனிதனை மனிதனாக மதித்து, எவர் மனதையும் தன் வாழ்நாளில் புண்படச் செய்யாத அவரது செயல், வாக்கு இவைதான் அவரை உலகளவில் உயர்த்தியதோடு மட்டுமன்றி, அனைவரின் உள்ளத்திலும் இடம்பெறச் செய்தது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. 'நான் ஒரு சாமானியன், மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்' என்று அவர் சொல்லும்பொழுது, அவை வெறும் வாய் வார்த்தைகளாக இல்லாமல்,உண்மையின் உருவாக அவரது உள்ளத்தில் இருந்து வெளியானவை என்பதற்கு அவர் வாழ்ந்து காட்டிய வழியே சான்றாகும்.

அரசியலில் கருத்து மாறுபட்டவர்களை அவர் வாழ்த்திய துணிவும், கட்சித் தொண்டர்களிடம் குடும்பப் பாசத்தைப் புகுத்திய திறனும், எழுத்தாற்றலில் பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளை அறிமுகப்படுத்திய விதமும், கலைத் துறையை முழுமையாக அரசியலுக்குப் பயன்படுத்தி வெற்றிகண்ட தன்மையும் அண்ணா ஒருவருக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்' என்ற அவரது முழக்கம் என்றென்றும் அவர் வழி நடப்போர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்;
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு;
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்;
இனி நடப்பவைகள் நல்லதாக இருக்கட்டும்;
மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு;
மறப்போம்! மன்னிப்போம்!

போன்ற அவரது பொன்மொழிகள் என்றென்றும் நிலையாகத் தமிழ் மொழியில் அழியா இடத்தைப் பெற்றுள்ளன.

அண்ணாவின் பெருந்தன்மை அகில உலகப் பெயர் பெற்றது. அண்ணாவின் சகிப்புத் தன்மை இமாலயப் பெருமை கொண்டது. உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள வலுவான தொண்டர்களின் தலைவரான அண்ணா வன்முறை நாடாத வரலாற்று நாயகர். பல்வேறு இனத்தினர், மொழியினர் வாழும் மதச்சார்பற்ற மாபெரும் இந்தியத் துணைக் கண்டத்தில், தன்னை யார் என்று அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்திக் கொள்கிறபோது, 'நான் ஒரு திருநீறு அணியாத இந்து, சிலுவை அணியாத கிறித்தவன், கைலி கட்டாத முஸ்லீம்' என்று பெருமையோடு தன்னை அழைத்துக் கொண்டவர். 'பகுத்தறிவுப் பாதுகாவலர்' என்று பெருமையோடு அனைவராலும் அழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, பழமையின் பெருமைகளுக்கும் பிறரின் நம்பிக்கைகளுக்கும் வழங்க வேண்டிய மரியாதையை எந்த நேரத்திலும் வழங்கத் தவறியதில்லை.

பேரறிஞர் அண்ணா பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு அடித்தளமாக இருந்தது நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தான். அந்த இயக்கங்களின் பரிணாம வளர்ச்சியின் வாரிசாகத்தான் அவர் வளர்ந்து, சிறந்து இன்று நமது வணக்கத்திற்குரிய வரலாறாகத் திகழ்கிறார். அவர் வழி நின்று, அவரது வாரிசாகத்தான் நாங்கள் இன்று தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை மகத்தான மக்கள் ஆதரவோடு நடத்தி வருகிறோம். 'அண்ணா எங்களுக்கு மட்டும் சொந்தம்' என்பவர்களை மக்கள் மறந்து விட்டார்கள். 'அண்ணா மக்களுக்குச் சொந்தமானவர்' என்ற புரட்சித் தலைவரின் வழியொட்டி நடப்பவர்களான நாங்கள், அண்ணாவின் அடிச்சுவட்டில் ஆட்சிப் பொறுப்பை இன்று நடத்திக் கொண்டிருக்கிறோம்.



## விளையாட்டு வீராங்கனை அமுதாவுக்கு தமிழக முதல்வரின் ஊக்கப் பரிசுகள்!

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவி செல்வி அமுதா தனது ஏழ்மையான நிலையிலும் கடுமையாகப் பயிற்சி செய்து, ஆசிய சாம்பியன் பட்டம் பெற்றார். அதைப் பாராட்டி, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவரது திறமையை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக ரூ.25,000 உதவித் தொகையை 18.8.93 அன்று தலைமைச் செயலகத்தில் செல்வி அமுதாவிடம் வழங்கினார்.

மீனவர் சமுதாயத்தில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த செல்வி அமுதாவைப் பாராட்டி, தமிழகத்தின் விளையாட்டுத் துறையை மேலும் சிறப்பிக்கும் வண்ணம், செல்வி அமுதாவை தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் தத்து எடுத்துக் கொள்ளும் என்றும், அப்பெண்ணின் திறமையை மேலும் வளர்ப்பதற்காகச் சர்வதேச விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் ரூ.50,000 மதிப்புள்ள சைக்கிள் ஒன்று வழங்கப்படும் என்றும், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் மூலம் ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும் என்றும், அவருடைய விளையாட்டுப் பயிற்சிக்குத் தேவையான ஊட்ட உணவும், தகுந்த பயிற்சியும் அளிக்கப்படும் என்றும், அப் பெண்ணின் குடும்பம் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளதால் அக்குடும்பம் குடியிருப்பதற்கு ஒரு வீடும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

அப்பெண்ணின் தந்தை தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமத்தில் தினக்கூலியாக ரூ.30 பெற்று வருவதை அறிந்த டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவருடைய பணி நிரந்தரம் செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்;
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!

—இராமலிங்க அடிகளார்



# எண்ணம் கவரும் வண்ணப் பறவைகள்!

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

கூந்தன்குளம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் உள்ள ஒரு கிராமம். அது திருநெல்வேலியிலிருந்து சுமார் 40 கி.மீ. தூரத்திலும் அரபிக்கடலுக்கு மேற்கே சுமார் 30 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இதைச் சுற்றிலும் பல குளங்கள் உள்ளன. இருப்பினும் வெளிநாட்டுப் பறவைகள் இங்கு வந்துதான் குவிகின்றன. இங்கு ஜனவரி மாத அளவில் வர ஆரம்பிக்கும் பறவைகள் இங்குள்ள மரங்களில் கூடுகட்டி, முட்டையிட்டு குஞ்சுபொரிக்கின்றன. பெரியவை ஆகும்வரை அவைகளுக்கான உணவு தேடிக்கொணர்ந்து வளர்க்கின்றன. பறக்கும் தகுதிவரை குஞ்சுகளைப் பாதுகாத்து, பின் ஆடிமாத முடிவிற்குள் எல்லாம் அழைத்துச் சென்றுவிடுகின்றன.

இப்படி நடப்பது இன்று நேற்று அல்ல. பல ஆண்டுகளாக இவ்விதமே நடந்து வருகின்றது. ஆனால், 1992-லிருந்து வெளிநாட்டுப் பறவைகளின் வரத்து அதிகரிக்கத் தொடங்கி விட்டது. காரணம், முக்கியமாக இக்கிராமத்திலுள்ள மக்கள் பறவைகளுக்கு மிகுந்த பாதுகாப்புக் கொடுப்பது, அவைகளுக்கு வேண்டிய உணவு கூந்தங்குளத்திலும் அருகாமையில் உள்ள குளங்களிலும் கிடைப்பது மற்றும் இன விருத்திக்கான தட்பவெட்பச் சூழ்நிலை சரிவர அமைந்திருப்பது மாகும்.

இதன் காரணமாக, 1992-இல் 15,000-க்கும் மேற்பட்ட பறவைகள் இங்கு வந்து சென்றன. இவ்வாண்டு 18,000-க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் வந்து சென்ற வண்ணம் உள்ளன. ஆண்டுதோறும் புதுவகையிலான பறவையினங்களும் வந்து செல்கின்றன. சென்ற ஆண்டு (1992-ஜனவரியில்) Flamingo என்ற பறவை கூந்தங்குளத்திற்கு வருகை தந்து குளத்தில் மண்கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரித்து அவைகளுடன் பறந்து சென்றன.

Flamingo குளத்தில் முட்டையிட்டு குஞ்சுபொரிப்பதைப் பார்வையாளர்களுக்குக் கூறுகையில், மண் குவியலையும் காட்டப்பட்டது. அதற்கு அவர்கள் இங்குதான் முதன் முதலில் குளத்தில் பார்க்கிறோம் என்று கூறினார்கள். இவ்வாண்டும் Flamingo பறவைகள் கூந்தங்குளத்திற்கு வந்து முட்டையிட்டு குஞ்சு பொரிந்து மே மாதத்தில் சென்று உள்ளன.

இவ்வாண்டு இன்னொரு அதிசயம் நிகழ்ந்துள்ளது. தென் இந்தியாவிலேயே முதன் முதலாக, கூந்தங்குளத்திற்குதான் Glassy Ibsi என்ற நீர்ப்பறவை வருகை தந்திருப்பதும் முட்டையிட்டுக்குஞ்சு

பொரித்து பறக்கும் திறன் கிடைத்தவுடன் தாய்ப்பறவைகளுடன் பறந்து சென்றிருப்பதும் இக்கூந்தன்குளத்திற்குத் தனிச் சிறப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பறவை ஆராய்ச்சியாளர்களுக்கு இதனைக் கூறி அவர்களுக்கு Glassy Ibis பறவைகளை நேரில் காட்டியதில் மிகவும் ஆச்சரியம் அடைந்து மலைத்து நின்ற காட்சி என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்.

இங்கு வரும் பறவைகளின் பெயர்களைத் தெரிந்து கொள்வோமா? கூழக்கடா, வண்ண நாரை, கரண்டிவாயன், வெள்ளை அரிவாள் மூக்கன், பாம்புத்தாரா, பூநாரை, நண்டு கொத்திநாரை, வெள்ளை நாரை, நீர்க்காகம், சின்ன கொக்கு, பெரிய கொக்கு, மாட்டுக்கொக்கு, குருட்டுக் கொக்கு, சாம்பல் கொக்கு, ஆள்காட்டி, வானம்பாடி, ஆலா, நீர்மூழ்கிக் கோழி, சிறவி, இந்தியன் ஷாஹ், வக்காரா.

மேலே கூறப்பட்ட இனவிருத்தி இனங்கள் தவிர, முதன்முறையாக 1992-இல் Flamingo இங்குவந்து இனவிருத்தி செய்து குஞ்சுகளுடன் பறந்து சென்றுள்ளன. 1993-இல் மேற்கண்டபறவைகளுடன் Glassy Ibis என்ற பறவை இனம் வந்து முட்டையிட்டு குஞ்சு பொரித்து சென்றிருப்பது கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டு என்பதை யாராலும் மறக்க முடியாது. மறுக்கவும் முடியாது.

இச்சரணாலயம் தற்சமயம் புலிகள் திட்டத்தின் கீழ் மேம்பாட்டு வேலை பாதுகாப்பு வேலை மற்றும் தவறி விழுந்த அனாதைக் குஞ்சுகளுக்குப் பாதுகாப்பாக இருப்பிடவ்சதி, உணவு வசதி ஏற்படுத்தி, காவலர்கள் நியமித்து நல்ல முறையில் கவனித்து வரப்படுகிறது. ராஜஸ்தானில் உள்ள பரத்பூர் பறவைகளின் சரணாலயத்திற்கு அடுத்தது இங்கு தான் பலவிதப் பறவையினங்கள் அதிகமாக வந்து செல்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

கடந்த ஆண்டு (1992-இல்) இப்பறவை இனங்களைக் காண 20-25 ஆயிரம் பார்வையாளர்கள், காரிலும், பஸ்ஸிலும், வேன்களிலும் வந்து சென்றுள்ளனர். இவ்வாண்டும் இதுவரை 25,000 பார்வையாளர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் வந்து சென்றுள்ளனர். பார்வையாளர் இளைப்பாற, உணவு உட்கொள்ள தற்காலிக இடவசதி ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. குடிநீர் வசதியும் உண்டு. பறவைக்கூடுகள் 600-க்கும் மேற்பட்டு கட்டப்பட்டுள்ளன. முட்டைகளும், குஞ்சுகளும் மரங்களில் உள்ள கூடுகளில் இன்னமும் காணப்படுவதால் ஆகஸ்ட் மாதம் வரை ஆராய்ச்சியாளர்கள் இன்னும் வந்து கொண்டுதான் உள்ளனர். பள்ளி மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இது ஒரு அரிய வாய்ப்பு.

கூந்தன்குளத்திற்கு, வெளிநாட்டுப் பறவைகள் பெருமளவில் இம்மாவட்டத்தைத் தாயகமாக எண்ணி ஆண்டுதோறும் வருகை தந்து சிறப்பிக்கின்றன. இப்பகுதியைச் சுற்றுலா மையமாக அமைத்து, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தைப் போன்று அனைத்து அடிப்படை வசதிகயையும் செய்து தர வேண்டும் என்று திட்டங்கள் தீட்டப் பெற்று கருத்துரு ஒன்று அரசுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர்.வேலு, இ.ஆ.ப., அவர்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழா தொடக்க நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, “கூந்தன் குளத்தில் பறவைகள் சரணாலயம் அமைத்து தமிழகத்தின் சிறந்த சரணாலயமாகத் திகழும் வேடந்தாங்கல் போன்று அனைத்து மக்களும் வந்து செல்லும் சுற்றுலா மையமாகத் திகழச் செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டு உள்ளார்.

மாவட்ட நிர்வாகம் அனுப்பிய கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒத்துழைப்புடன் பறவைகள் சரணாலயம் கூந்தன்குளத்தில் சிறப்பாக அமைய அனைத்து ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்யும்” எனக் குறிப்பிட்டார்.

எங்கிருந்தோ வந்து, பயமின்றிச் சுதந்திரமாக மிகவும் பக்கத்தில் இருந்தும் நடந்தும், முட்டையிட்டும், குஞ்சுபொரித்தும், பறந்து மக்களோடு இணைகிற இப்பறவையினங்களைக் காணக் கண் கோடி வேண்டும்.

**எஃ. ஏ. லாறன்ஸ்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்**

## அண்ணா போற்றிய பெருமக்கள்

### கலைவாணர் என்.எஸ்.கே.



“கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு ‘சகாப்தம்’!

அவரோடு அந்தச் ‘சகாப்தம்’ முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும்; மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் - மக்களின் உள்ளத்தைக் தொட்டுச் சிரிக்க வைத்தவர்; உலகிலேயே இவர் ஒருவர் தான் ம்க்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

# நீலப்புரட்சி ஏற்பட நித்தம் பணியாற்றுவோம்!




கே. சுப்பையா
மீன்துறை இணை இயக்குநர்
(உள்நாட்டு மீன்வளம்)
சென்னை.


உள்நாட்டு மீன்வளப் பெருக்கத்திற்கென 1940-லிருந்து பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவை அனைத்தும் துறை சார்ந்த திட்டங்களாகவே இருந்து வந்துள்ளனவே தவிர, பொது மக்களின் கவனத்தை ஈர்த்து மீன்வளர்ப்பில் அவர்களை ஈடுபடுத்த முடியவில்லை. 1960-களில் கூட்டின மீன் வளர்ப்பு முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்திட முன்னோடித் திட்டங்கள் தீட்டப்பட்டு அதைப் பெரும் விளம்பரத்துடன் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் பரிந்துரை செய்தது. இருந்தும் எதிர்பார்த்த விரிவாக்கம் நடைபெறவில்லை.

மத்திய மீன்வள ஆலோசனைக் கழகம் பல்வேறு கட்டங்களில் உள்நாட்டு மீன்வளப் பெருக்கம் பற்றி விவாதித்து சரியான நடைமுறைகளைக் கண்டறிந்து தெரிவித்திட ஒரு தொழில் நுட்பக் குழுவை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரையின்படி 1971-ஆம் ஆண்டு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்கும் கருத்தினை வெளியிட்டது. அந்த ஆண்டு தேசிய மட்டத்தில் 5 முகமைகளை அமைத்துப் பரிசோதனை செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் 50 மாவட்டங்களில் இத்திட்டத்தைப் பரிட்சார்த்தமாகக் கொண்டு வந்தது.

தமிழ்நாட்டில் முதன் முறையாக 1975-76-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்து வளர்ந்து தமிழ்நாட்டில் தற்போது 13 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் வளர்ப்பினை ஊக்கப்படுத்துவதே இதன் தலையாய நோக்கமாகும். மீன்வளர்ப்பிற்கு உகந்த நீர் நிலைகளைத் தேர்வு செய்து புதிய தொழில்நுட்ப உத்திகளைக் கொண்டு, விரைவாக வளரக்கூடிய மீன்வகைகளை இருப்புச் செய்து மீன் உற்பத்தியைப் பெருக்குவது, மீன் வளர்ப்போர் இல்லாத இடங்களில் திறமையான, ஊக்கமுள்ள நபர்களைத் தேர்வு செய்து தொழில் நுட்பப் பயிற்சி கொடுத்து, உள்ளீட்டுக் கடன் வசதி பெற வழிமுறைகளை விளக்கிக் கூறி மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல், ஏற்கெனவே, மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பகுதிகளில் மேலும் பலரை அதில் ஈடுபடும் வகையில் வேலை வாய்ப்பினைப் பெருக்கிட அனைத்து உதவிகளும் செய்வதாகும்.

மேலும், பயனற்ற நீர்நிலைகளையும் மராமத்துப் பணிகள் செய்து மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்துவது. ஏற்கெனவே உள்ள மீன்வளர்ப்பு முறைகளில் புதிய உத்திகள் மூலம் மீன் உற்பத்தியைப் பல மடங்கு பெருக்குவது. இக்கருத்தினைப் பொதுமக்களிடையே பரப்பி கிராம மக்களுக்கு இதை ஒரு புதிய தொழில் பிரிவாக ஊக்குவிப்பது. வளர்த்தெடுத்த மீனிற்கு உரிய விலை கிடைக்கும் வகையில் விற்பனை முறையை ஒழுங்குப்படுத்துவது போன்ற பணிகளில் இந்த முகமை ஒரு மாவட்ட மையமாக இருந்து செயல்படும். மத்திய-மாநில அரசுகளும், நிதி நிறுவனங்களும் இதற்கு உதவிகரமாக இருக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் புரதச்சத்து இன்றியமையாதது. இதில் மாமிசப் புரதச்சத்து கட்டாயம் ஒரு கூறாக இருந்தாக வேண்டும். இது இறைச்சியாகவோ, பாலாகவோ, முட்டையாகவோ இருக்கலாம். உலகின் நில-நீர்ப் பரப்பின் விகிதப்படிப் பார்த்தால் நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருள் உற்பத்தி விரிந்து ஒரு முடிவை நோக்கிச் சென்று கொண்டு உள்ளது. எனவே, நீர்வழி உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவது காலத்தின் கட்டாயமாகி வருகிறது. மேலும், மீன் உணவு மிகச் சிறந்த புரதச்சத்தை உடையது. எளிதில் செறிக்கக்கூடியது. குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும். கல்லீரல்நோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு உகந்த மருந்தாகவும், உள்ளது. திசுக்களுக்குத் தேவையான அமிலங்கள், வைட்டமின்கள் போன்றவை தேவையான அளவில் இதில் உள்ளன. இருந்தும் இந்தியாவில் சராசரியாக ஒரு மனிதன் ஒரு ஆண்டிற்கு உட்கொள்ளும் மீன் உணவின் அளவு 3.5 கிலோ ஆகும். எனவே, மீன்வளத்தைப் பெருக்குவது மிகப் பெரிய தேவைகளில் ஒன்றாகிறது.

**மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை யின் செயல்முறை**

ஒவ்வொரு மீன்வளர்ப்போர் மேம் பாட்டு முகமைக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், அவரின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு மேலாண் மைக்குழுவும் அவரின் ஆலோசனை யின்படி செயல்பட ஒரு முதன்மை நிர்வாக அலுவலரும் உள்ளார். முகமை யின் வரவு, செலவு மற்றும் செயல் முறைகள் மேலாண்மைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்படு கிறது. முதன்மை நிர்வாக அலுவலர் திட்டத்தைச் செயல்படுத்தும் தலைமை அலுவலராவார்.

விரிவாக்க அலுவலர்களால் குளங் களைத் தேர்வு செய்தல், தொழில் நுட்ப அறிவுரை வழங்குதல், மீன்குஞ்சு இருப்புச் செய்தல், குளங்களின் தன்மைக் கேற்ப உரம், உணவிட ஆலோசனை கூறுதல், மீன்களின் வளர்ச்சியைச் சோதனை செய்து வளர்ச்சியைப் பெருக்க தொழில் நுட்ப ஆலோசனை கூறுதல், அறுவடை செய்யப்படும் மீன்களை விற் பனை செய்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. புதிய குளங்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியறிந்து முகமைக்கு நீண்டகாலக் குத்தகைக்கு எடுக்க ஏற்பாடு செய்யப் படுகின்றது. முகமையைச் சேர்ந்த பொறி யாளரின் மூலம் குளங்களில் பரப்பளவு நிர்ணயிக்கப்பட்டு அவற்றை ஆழப்படுத்த மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. மேலும் புதிய சொந்தமான பண்ணைக்குளம் அமைக்கவும், திட்ட மதிப்பீடுகள் தயாரிக் கப்படுகின்றன.

**மீன்வளர்ப்பாளராக முகமையில் சேரத் தகுதிகள்**

மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தேர்வுக்குக் கீழ்கண்ட அடிப்படையில் மீன்வளர்ப்பாளர்களைத் தேர்வு செய்கின்றது. 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். எட்டாம் வகுப்பு படித்திருத்தல் வேண்டும். மீனவக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகவோ அல்லது மீன்பிடிப்புத் தொழில் செய்பவராகவோ அல்லது மீன்பாசிக் குத்தகைதாரராகவோ அல்லது சொந்தக் குளம் வைத்திருப்பவராகவோ அல்லது மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளவராகவோ இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற் குக் கீழ் உள்ள ஏழைகளும், தாழ்த்தப் பட்ட, மலைவாழ் மக்களும், பெண்களும் முன்னுரிமை அடிப்படையில் இத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய வழி முறைகள் உள்ளன. கூடுமானவரை குளங்கள் இருக்கும் பகுதியில் உள்ள வரையே தேர்ந்தெடுப்பர்.

**மீன்வளர்ப்பாளருக்குப் பயிற்சி**

தேர்வு செய்யப்பட்ட மீன்வளர்ப் பாளர்களுக்கு 15 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மீன்குஞ்சு உற் பத்தி, மீன்வளர்ப்பு முறைகள் பற்றி விரிவான உரைகள் மூலமும் மீன் வளர்ப்புப் பண்ணைகளுக்கும், மீன்குஞ்சு, உற்பத்தி நிலையங்களுக்கும் நேரில் சென்று பார்த்தும் பயிற்சி பெறு கின்றனர். ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு தினப்படி ரூ.25-ம் போக்குவரத்துச் செலவுக்கு ரூ.40-ம் கொடுக்கப்படுகிறது.

**கடன் மற்றும் மானியம்**

நீர் அதிகம் நிற்காத தூர் எடுக்கப்

# கூட்டு இன மீன் இனங்கள்



படாத குளங்களை வங்கிக்கடன் மூலம் தூர் எடுக்க ஏற்பாடு செய்வதன் மூலம் நீண்ட நாட்கள் நீர்தேங்கிடச் செய்யலாம். இது கிராம மக்களுக்கும் பயன்தரும். ஒரு எக்டேருக்கு ரூ.32,000 வரை தூர் எடுக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 75 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் 25 சதவிகிதம் மானியமாகவும் பெற லாம். இதேபோன்று இடுபொருள்கள் வாங்கிட 16,000 வரை அனுமதிக்கப் படும். இத்தொகையைக் கடனாக வங்கி களிடமிருந்து பெற்றுக்கொள்ள முகமை ஏற்பாடு செய்யும். முதலாம் ஆண்டு 25 சதவிகிதம் மானியமாக ரூ.4,000 பெறலாம்.

**குளங்கள் தேர்வும், தயார்ப்படுத்தலும்**

கிராமப்புறங்களிலுள்ள, சிறிய குளங்கள் பெரும்பாலும் மீன்வளர்ப் புக்குத் தேர்வு செய்யப்படுகின்றன. கூடுமானவரை நீர்ப்பாசனக் குளங்களைத் தவிர்க்கலாம். 6 மாதங்கள் வரை மொத் தப் பரப்பில் 50 சதவிகிதம் வரை நீர் இருக்கக்கூடிய குளங்களாகத் தேர்வு செய்ய வேண்டும். மீன்குஞ்சுகள் இருப்புச் செய்யவும், பராமரிப்பினைத் தொடரவும், மீன்பிடிக் காலத்தில் சிரமமின்றி செயல்படுவதற்கு ஏதுவாகத் தேர்வுச் செய்யப்படும் குளங்கள் சாலை ஓரங்களிலோ அல்லது சாலைத் தொடர் புக்கு நெருங்கிய தூரத்திலோ உள்ள குளங்களாக இருப்பது நல்லது.

**உரமிடுதலும் உணவிடுதலும்**

இருப்புச் செய்யப்படும் மீன்குஞ்சு களுக்குத் தேவையான நுண்ணுயிர் உணவு இயற்கையாகவே நீரில் கலந் திருக்கவேண்டும். எந்த அளவிற்கு நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை நீரில் உள்ளதோ அதே அளவிற்கு மீன்வளர்ச்சி பெறும். எனவே, உரமிட்டு குளத்தின் அடிப்படை நுண்ணுயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். இதற்கு இயற்கை உரமான சாணம் எக்டேருக்கு 10 டன் என்ற அடிப்படையிலும் கொளிஞ்சி போன்ற பசுந்தாள் உரம் 10 டன் என்ற அடிப்படையிலும் அடி உரமாக இட வேண்டும். மேலும், சூப்பர் பாஸ்பேட் 250 கிலோ போட வேண்டும். நீரின் தன்மையை அனு சரித்து 250 கிலோ யூரியாவும் உரமாக இடலாம். சூப்பர் பாஸ்பேட், யூரியா போன்ற உரங்கள் நீரின் தன்மையை அனுசரித்துத் தொடர்ந்து போட வேண்டி யவை. நன்கு உரமேறிய குளத்தின் நீரில் முழங்கை வரை அமிழ்த்திப் பார்த்தால் உள்ளங்கையின் வெளுப்பு நிறம் தெளி வற்று காணப்படும். இந்த நிலையில் மீன் குஞ்சு இருப்புச் செய்யலாம். வளர்ப்புக் காலத்தில் நீரின் நுண்ணுயிரிகளின் அளவு மிகவும் குறைந்துவிட்டால் இரண் டாம் முறையும் மேலே கூறியபடி உர மிடலாம். இதனால் மீன் குஞ்சிற்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை. பொது வாக இக்குளங்களைப் பயன்படுத்தும் கிராம மக்கள், உரமிடுவதால் நோய் வருவதாகவும், கால்நடைகள் பாதிப்ப தாகவும் கூறுவர். அது உண்மையல்ல.

மீன்வளர்ப்பில் இயற்கை உணவை மட்டும் நம்பி செயல்பட்டால் எதிர் பார்க்கும் உற்பத்தியை எட்ட முடியாது. எனவே, செயற்கை உணவும் இட வேண்டும். சாதாரணமாக, தூள் செய்யப்பட்ட கடலைப் புண்ணாக்கு, நெல் தவிடு போன்றவற்றை நீரின் மேற்பரப்பில் தூவி விடலாம். மூன்று நான்கு மாதம் வளர்ந்த மீன்களுக்கு இந்த உணவினை நீர்விட்டுக் கட்டியாகப் பிசைந்து உருண்டை பிடித்து – சிறிய கூடைகளிலோ, பிளாஸ்டிக் தட்டு களிலோ வைத்து குளத்தில் பல பகுதி களில் நீருக்கு அடியில் வைக்கலாம். ஒரு நாளில் இரண்டு முறை இந்த உணவைப் பிரித்து குறிப்பிட்ட நேரத்தில் வைக்க வேண்டும். பொதுவாக மீனின் எடை யில் 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் உணவிட வேண்டும்.

**மீன்குஞ்சு இருப்புச் செய்தல்**

ஒரு குளத்தில் ஒரே இன மீன்குஞ்சு இருப்புச் செய்யாமல் பலவகைக் கெண்டை மீன் குஞ்சுகளை இருப்புச் செய்ய வேண்டும். வேகமாக வளரக் கூடிய வெவ்வேறு உணவுப் பழக்க முடைய, நீரின் மட்டத்தில் மூன்று நிலையில் வாழக்கூடிய, நிலையான நீர்நிலைகளில் இனவிருத்தி செய்யாத ஆறுவகை மீன்களை ஒரே நீர்நிலைகளில் குறிப்பிட்ட விகிதத்தில் இருப்புச் செய்து வளர்ப்பதற்குக் கலப்பின/கூட்டின மீன்வளர்ப்பு என்று பெயர். கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளிக்கெண்டை, புல்கெண்டை, சாதாக்கெண்டை என்ற இந்த ஆறுவகை மீன்குஞ்சுகளையும் சாதாரணமாக எக்டேருக்கு 5000 என்ற எண்ணிக்கையில் இருப்புச் செய்யலாம். இருப்புச் செய்யப்படும் குஞ்சுகள் கட்டாயமாக 50 எம்.எம்.-க்கு மேல் வளர்ந்தவையாக இருக்க வேண்டும். 100 எம்.எம். வளர்ந்தவையாக இருப்பது சிறப்பாகும். இந்த ஆறுவகை மீன் குஞ்சுகளையும் ஒவ்வொரு நீர்நிலையிலும் கட்டாயம் இருப்புச் செய்ய வேண்டு மென்பதில்லை. நீரில் அதிக அளவிற்கு நீர்ப்பாசிகள் இல்லாத குளங்களில் புல்கெண்டை இருப்புச் செய்ய வேண்டிய தில்லை. பிற ஐந்து இனங்களையும் கூட நீரின் தன்மை, அடிப்படை நுண்ணுயிர் உற்பத்தித் திறன் நீர் இருக்கும் கால அளவு, குளத்தின் மண்ணின் தன்மை போன்றவற்றை அனுசரித்து இருப்பு சரிசெய்ய வேண்டும். கட்லா, வெள்ளிக் கெண்டை, நீரின் மேல்பரப்பில் உள்ள உணவை உட்கொள்பவை; ரோகு, நீரின் நடுமட்டத்திலுள்ள நுண்ணுயிரை உட் கொண்டு வளர்பவை; மிர்கால்-சாதாக் கெண்டை தரையிலுள்ள பலவகை உணவை உட்கொள்பவை. இந்த உணவுப் பழக்க முறையை அடிப்படை யாக வைத்து கட்லா, வெள்ளிக் கெண்டையின் எண்ணிக்கை 40 சதவிகிதமாகவும், ரோகு மிர்கால், சாதாக்கெண்டைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றையும் 20 சதவிகிதமாகவும் இருப்புச் செய்யலாம். முன் ஆண்டு

## புகை உயிருக்குப் பகை

கடந்த 31.5.1993-ஆம் நாள் திங்கட் கிழமை ஒரு நாளை - உலக சுகாதார அமைப்பானது புகையிலை தவிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு அறி வித்தது.

காரணம் - உயிருக்குப் பகையான புகை பிடிக்கும் பழக்கத்தால், ஆண்டு தோறும் 30 இலட்சம் பேர் உயிரிழக் கின்றனர். 1960-இல் புகைப்பிடிக் கும் பழக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் இது மூன்று மடங்கு அதிகமாகும்!

களின் மீன்வளர்ச்சியின் அனுபவத்தைக் கொண்டு இந்த விகிதாச்சாரத்தைக் கூட்டலாம்/குறைக்கலாம். ரோகு, மிர்கால், போன்றவை சில நீர் நிலைகளில் விரைவாக வளர்வதில்லை. அனுபவ ரீதியாக இவைகளை இருப்புச் செய்வதைக் குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாம். முகமை அலுவலரின் அறிவுரையை நாடிச் செயல்படலாம். சாதாரணமாக இந்த வகைக் கெண்டைகள் 7-8 மாதங்களில் ஒரு கிலோவிற்கு மேல் வளரும்.

தேவையான மீன் குஞ்சுகளை முகமை முயற்சி செய்து வாங்கிக் கொடுக்கும். நன்கு வளர்ந்த அனைத்து மீன்குஞ்சுகளும் நாம் நினைத்த நேரத்தில் கிடைப்பதில்லை. எனவே, வசதி உள்ளவர்கள் முன் கூட்டியே மீன்குஞ்சுகளை வாங்கி கூண்டுகளில் இட்டு வளர்க்கலாம். தேவையான அளவு வளர்ந்தவுடன் இருப்புச் செய்யலாம். கூண்டு வாங்கும் இடம், அளவு, பராமரிப்பு முறை போன்றவற்றை முகமைப் பணியாளர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

**பண்ணைக் குளங்களில் மீன்வளர்ப்பு**

கடந்த காலங்களில் கிராமக் குளங்களை நம்பியே மீன்வளர்ப்பினைத் தொடர வேண்டியிருந்தது. அண்மைக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் புதிய மீன்வளர்ப்புக் குளங்கள் அமைத்து வெற்றிகரமாக மீன்வளர்ப்பினை நடத்தி வருகின்றனர். அரசு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டம் தயாரிக்கும் பொழுதே, நீர் தேங்கக் கூடிய தாழ்வான விவசாயத்திற்குப் பயன்படுத்த இயலாத நிலங்களை மீன்வளர்ப்பிற்குப் பயன்படுத்தலாமெனக் கூறி வந்தது. ஆனால், தற்போது தான் இக்கருத்து மக்களிடையே விரிவடைந்து வருகிறது. இதைப் பயன்படுத்தி அரசும் புதிதாக வகுத்துள்ள கொள்கையின்படி குளம் அமைப்பதற்கான நிரந்தரச் செலவில் அதிகபட்சமாக ஒரு எக்டேருக்கு 20 சதவிகித மானியம் ரூ.20,000 வழங்க ஆணை வழங்கியுள்ளது.

நல்ல நீர் வசதியுள்ள, களிமண் பூமியை இத்தகைய குளங்கள் அமைப்பதற்குப் பயன்படுத்தலாம். நிலத்தின் களிப்புத் தன்மை, நீரின் உப்புத் தன்மை கார அமிலத் தன்மை, மீன் வளர்ப்பிற்கு உகந்ததாவென்பதை முகமை ஆய்வு செய்து அறிவுரை வழங்கும். (1) நீரின் அளவு குறைவாக இருந்தால் 50 செ.மீ. ஆழத்திற்கு மண் எடுத்து குளம் அமைக்கலாம். (2) நீரின் அளவு அதிகமிருந்து வண்டல் கலந்த களிப்பு மண் பகுதியாக இருந்தால் முழுப்பரப்பையும் வெட்டாமல், 3 மீட்டர் அகலத்திற்கு உள்ள மண்ணை மட்டும் 50 செ.மீ. அளவிற்கு குளம் அமைக்கும் இடத்தில் பரப்பின் ஓரங்களில் மட்டும் உள் வாய்க்கால் போல் தோண்டி எடுத்து கரை அமைக்கலாம். இந்த முறை வெகுவாக தஞ்சை மாவட்டத்தில் பரவி வருகிறது. சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் முகமையில் அங்கத்தினராகச் சேர்ந்து பயனடையலாம்.

ஒரு எக்டேர் பண்ணை அமைக்க (1)வது முறைப்படி மண்வெட்டிக் கரை அமைக்க ரூ.70,000 வரை செலவாகும். ஆனால் (2) முறைப்படி மண்வெட்டிக் கரை அமைக்க ரூ.8,000 முதல் ரூ.12,000 வரை செலவாகும். இப்படி, குளம் அமைக்க வங்கிகள் கடன் கொடுக்கின்றன. தேசீய விவசாய வங்கி (NABARD) முழுக் கடனையும் வங்கிகளுக்கு அளிக்கின்றது. (REFINANCE) இவ்வாறு அமைக்கும் குளங்களில் கெண்டையின மீன்களுடன் நன்னீர் இறால்களையும் சேர்த்து வளர்த்து, ஒரு எக்டேருக்குச் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.35,000 வரை வருமானமாகப் பெற வாய்ப்பு உள்ளது. முகமை, தொழில் நுட்ப ஆலோசனை கொடுப்பதுடன், திட்ட மதிப்பீடு தயாரித்து வங்கிக்குப் பரிந்துரை செய்கிறது.

**முகமையினால் ஏற்படும் பயன்கள்**

குளங்களைத் தேர்வு செய்வதும், மீன்வளர்ப்போரைத் தேர்வு செய்து பயிற்சியளிப்பதும் முதல் பணியாகும். குளங்கள் தயாரிப்பு - உரமிடுதல், உணவிடுதல், மீன்குஞ்சு இருப்புச் செய்தல், மீன்வளர்ப்புக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் போன்ற அனைத்துத் தொழில் நுணுக்க உதவியும் முகமை இலவசமாகச் செய்து கொடுக்கும். குளங்கள் மராமத்து, உரம், மீன்குஞ்சு வாங்குவது - இப்பணிகளுக்கான நிதி ஆதாரங்களைப் பெற உள்ள வாய்ப்புகளை ஒருங்கிணைத்து உதவிடும். தற்போதுள்ள அரசு ஆணையின்படி:

1. குளங்கள் குறைந்த விகிதத்தில் குத்தகை நிர்ணயம் செய்து 10 ஆண்டுகள் வரை மீன்வளர்ப்பிற்கு வைத்துக் கொள்ளலாம்.

2. முகமையின் ஊர்திகளை மீன்குஞ்சு ஏற்றிச் செல்ல குறைந்த வாடகைக்கு வழங்கும்.

3. மராமத்துப் பணிகளுக்கு எக்டேருக்கு ரூ.8000 வரை மானியம் பெற முடியும்.

4. உரம், உணவு, மீன்குஞ்சு போன்றவைகளை வாங்கிட உள்ளீட்டுக் கடன் ஒரு எக்டேருக்கு ரூ.16,000 வரை பெற முடியும்.

5. முதல் ஆண்டில் உள்ளீட்டுக் கடனில் 25 சதவிகிதம் மானியம் ரூபாய் 4000 பெறலாம்.

6. பயிற்சிக் காலத்தில் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

7. புதிய மீன்வளர்ப்புக் குளங்கள் அமைக்க அதிகபட்சமாக ஒரு எக்டேருக்கு ரூ.20,000 வரை மானியம் உண்டு.

8. மீன்பிடிக் காலங்களில் மீன்பிடிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் முகமை ஏற்பாடு செய்யும்.

9. மீன்வளர்ப்போருக்கு வேண்டிய அனைத்துத் தொழில் நுட்ப ஆலோசனையும் முகமை வழங்கும்.

மீன் வளர்ப்பதன் மூலம் நிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருவாயைப் பெருக்கிடுவோம். நாட்டிலுள்ள எந்த வளர்ப்பு முறையும் (நெல், கரும்பு, குச்சிக் கிழங்கு, வாழை) மீன்வளர்ப்புக்கு நிகராகாது. பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும் செய்த நம் நாட்டில், நீலப் புரட்சி மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்கி புரதப் பற்றாக்குறையை நீக்கிடுவோம்.



● மக்கள் உடலுக்கு உணவு எத்தகையதோ, அத்தகையது மக்கள் அறிவிற்குக் கல்வி.

● கல்வியில்லா ஒருவன் தன் வாழ்வில் பெறற்கரியபேற்றை இழந்தவனாகிறான்.



# காவிரி ஏன்? கங்கையும் இங்கு வரும்!

— கவிஞர் கரு. நாகராசன்

உடல் பொருள் ஆவி என்னும்
ஒப்பிலா மூன்றையும்
தேசத்திற்காக ஈந்த
தியாகிகளை
சரித்திர வரிகளுக்குள்
தரிசித்திருக்கிறோம்!
ஆனால்
பூவிரிந்து தேன் பாயும்
பொன்னான தமிழ் மண்ணில்
காவிரியை வரத்தடுத்த
கயமையினைப் போக்குதற்கு
உடல் பொருளால் செய்த
உன்னதத் தியாகமெல்லாம்
ஒரு பயனும் தராததால் -
உயிரையே தரத்துணிந்த
ஒப்பிலாத் தியாகத்தை -
சங்க இலக்கியத்தின்
சத்தான வீரமெல்லாம்
தங்கிக் குடியிருக்கும்
தன்மானத் தமிழ்மனத்தை
புரட்சித்தலைவியென்னும்
புகழ்வடிவில்
சரித்திரம் இப்போதுதான்
சந்திக்கிறது;
தேசமே அவரைப் பற்றித்தான்
சிந்திக்கிறது!

வாடிய பயிரைக் கண்டபோது
வாடத்தான் முடிந்தது
வள்ளலாரால்!
ஆனால்
உயிரினைத்தந்து
பயிரினைக்காக்க
உறுதிமேற்கொண்டவர்
ஒப்பிலா நம்தலைவி!
பயிர்களிடத்தில்
வள்ளலாருக்கிருந்த
வாஞ்சையைவிட
தலைவியின் வாஞ்சை
தலையாயது அல்லவா?

வெயிலில் வாடிய முல்லைக்கு
தேரைத்தான் பாரி தந்தான்;
குளிரில் ஆடிய மயிலுக்கு
ஆடையைத்தான் பேகன் ஈந்தான்;
தங்களையே கொடையாகத்
தந்தவர்கள் யாருமில்லை!
ஆனால்
பயிர்களைக் காக்க
உயிரையே தரத்துணிந்த
வள்ளலைப் பற்றி எந்த
வரலாறும் சொன்னதுண்டா?
பாரியும் பேகனும்
புரட்சித் தலைவியின்
பக்கத்தில் நிற்பார்களா?

ஆடியும் பாடியும் வந்தோர்க்கு
அள்ளிக் கொடுத்த
வள்ளல் பலருண்டு;
ஆனால்
தீயில் துடித்தோர்க்கும்
செத்து மடிந்தோர்க்கும்
அன்றாடம் வழங்கும்நம்
அன்புத்தலைவி
ஈகைக்கே புதிய
இலக்கணம் படைத்தவர்.
அதனால்தான்
தண்ணீருக்காக ஏன்
தவமிருக்கிறீர்கள்?
கண்ணீரைத் தருகிறோம்
காணிக்கையாய் என்று
தாய்க்குலம் அழுதது;
தமிழகம் தொழுதது!

அசோகவனத்தில்
அன்றிருந்த சீதை
'சொல்ஒன்றால் உலகையே
சுட்டெரிப்பேனென்று
சூளுரைத்தாளாம்!
வங்கக் கடலோரம்
காவிரிக்காக நோன்பிருந்த
தங்கத் தலைவிக்காக
தமிழகமே பொங்கியபோது
'இந்த நிமிடம் முதல்
யாரும் எச்செயலிலும்
ஈடுபடாதீர்கள்' என்ற அவர்
ஒரு வாக்கே இங்கு
திருவாக்காய் மாறி
தேசமெங்கும் அமைதித்
தென்றலாய் வீசியது!
சீதையின்
நெருப்புச் சொல்லை
புரட்சித் தலைவியின்
விருப்புச் சொல்
விஞ்சிவிட்டதே!

உரிமையைக் காக்க தமது
உயிரையே தரத்துணியும்
வித்தகத் தலைவியின்
வீரமும் விவேகமும்
காவிரியை மட்டுமல்ல;
ஓர்நாள் இங்கே
கங்கையையும் கொண்டுவரும்!



# சென்னை மாநகரில் மகளிர் காவல் நிலையங்கள்

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள்தோறும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்' அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து சென்னை மாநகரில் உள்ள ஆயிரம் விளக்குப் பகுதியில் முதன்முதலாக 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' ஒன்றினை 13.4.92-இல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

அதன்பின்னர் - அதேபோல மதுரையில் 14.7.93 அன்றும், கோவையில் 20.8. 93 அன்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

அவற்றையடுத்து-23.8.93 அன்று - சென்னை மாநகரில், குறிப்பாக தென் சென்னை காவல்துறை மாவட்டத்தில் அடையாறு பகுதியிலும், வட சென்னைக் காவல் துறை மாவட்டத்தில் கொத்தவால் சாவடியிலும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்' இரண்டு திறந்துவைக்கப்பட்டன.

## தென் சென்னை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ்விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சிகளுக்கு - மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி முதலான அரசு உயர் அதிகாரிகளும், வாரியத் தலைவர்களும், காவல்துறை உயர் அதிகாரிகள் திரு சு. ஸ்ரீபால், திரு ராஜசேகரன் ஆகியோரும் - ஏராளமான தாய்மார்களும் பொதுமக்களும் வருகை தந்திருந்தார்கள்.

அடையாறு சரகத்தில் உள்ள காவல் நிலைய அலுவலகக் கட்டட வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியாக மாலை 3.50 மணிக்கெல்லாம் வந்து சேர்ந்தார்; அளிக்கப்பட்ட மகளிர் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்பு, அனைத்து மகளிர் காவலர் கட்டடத்தைத் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றினார்.

அங்கிருந்த பார்வையாளர் குறிப்பேட்டில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பின்

வருமாறு வாழ்த்துரை எழுதிக் கையெழுத்திட்டார்.

'தமிழ்நாட்டில் நான்காவதாகவும், சென்னை நகரில் இரண்டாவதாகவும் அமைக்கப்பட்டுள்ள இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பது எனக்குப் பெரும் மகிழ்வளிக்கிறது.

கடந்த 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆயிரம் விளக்கில், முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டு, அது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சட்ட பூர்வமான உரிமை அடிப்படையில் மனிதாபிமான உணர்வோடு பெண்கள் தரும் புகார்களை விசாரித்துக் குறைகளைத் தீர்க்க ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் உதவுகிறது என்ற நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது.



இந்த வகையில் ஆயிரம் விளக்கில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மக்கள் மத்தியிலும் - குறிப்பாகப் பெண்களிடத்திலும் மிக நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கிறது.

இதுதான் - தமிழகமெங்கும் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியது.

இவ்வகையில் - இந்த அனைத்து மகளிர் காவல் நிலையமும் சிறப்புறச் செயல்பட்டு, பொதுமக்களுக்கும் - குறிப்பாகப் பெண்களுக்குப் பாடுபட்டு உழைத்துக் காவல்துறைக்குப் பெருமை சேர்க்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வாழ்த்துகிறேன்.

—இவ்வாறு குறிப்பெழுதிவிட்டு, அருகே அமைக்கப்பட்டிருந்த அலங்



கார மேடைக்கு வந்தார் மாண்புமிகு முதல்வர்; பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் வாழ்த்தொலி முழக்கினார்கள். மகிழ்வோடு அவர்களை நோக்கிக் கரமசைத்தார் மாண்புமிகு முதல்வர்.

அதன்பின், மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கமலாவிடம் நன்முறையில், காவல் நிலையம் செயல்படவேண்டியவிதம் குறித்து அறிவுரை வழங்கினார்.

காவல்துறை உயர் அலுவலர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்கள்.



### வட சென்னை

அங்கிருந்து புறப்பட்டு, நேரே வட சென்னை மாநகர அனைத்து மகளிர் காவல் நிலையத் திறப்பு விழா நிகழிடத்திற்கு 4.30 மணியளவில் வந்து சேர்ந்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். 'பழக இனிமை - பணியில் நேர்மை - இதுவே நமக்குப் பெருமை!' என்று அங்கே எழுதிவைக்கப்பட்டிருந்தது.

அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் செல்லத்தாய் தலைமையில் நடைபெற்ற மகளிர் காவலர் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார். அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்துவைத்துக் குத்துவிளக்கேற்றினார்.

அங்கே வைக்கப்பட்டிருந்த பதிவேட்டில் குறிப்புரை எழுதி வாழ்த்தினார். மகளிர் காவலர்க்குத் தக்க அறிவுரைகள் வழங்கினார்.

பின்னர், மேடைக்கு அவர் வந்தபோது கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்த்தொலி எழுப்பினர்; மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார் மாண்புமிகு முதல்வர்.

அதன்பின் - இரண்டு பெண்மணிகள் தம் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்படி வேண்டவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒரு குழந்தைக்கு இராமச்சந்திரன் என்றும் இன்னொரு குழந்தைக்குக் கல்யாணி என்றும் பெயர் சூட்டி வாழ்த்தினார்.

காவல்துறை அதிகாரிகள் அளித்த நினைவுப் பரிசைப் பெற்றுக் கொண்டு - அங்கிருந்து விடை பெற்றார்.

### எத்தனைக் காவலர்

இந்தக் காவல் நிலையங்களில் - ஒரு பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர், 3 சப்-இன்ஸ்பெக்டர்கள், 6 ஏட்டுகள், 23 பெண் போலீசார் என்ற வகையில் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

---

## அண்ணா போற்றிய பெருமக்கள்

### டாக்டர் எம்.ஜி.ஆர்.

“எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது - என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும்.

உண்மைதானே!

எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும்.

முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறிடவா வேண்டும்?

இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று, பலர் எதிர்பார்த்தனர். அது என் மடியில் விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்!”





# பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகித ஒதுக்கீடு தேவை:



## உச்சநீதிமன்றத்தில் வழக்கு

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

"பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக நிலையை மேம்படுத்த மிகவும் அவசியமானதாகும் என்ற நிலையினை மீண்டும் வலியுறுத்த உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்ய உள்ளோம். இடஒதுக்கீட்டுக் கொள்கையில் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள நிலையினையும், அதன் நெறியினையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வரை தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 27.8.93-இல் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

"இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்த வரை, தமிழகத்திற்கென ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. அவ்வரலாறு 1921-ஆம் ஆண்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ. நடைமுறைக்கு வந்தது முதல் தொடங்குகின்றது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தான், இந்திய அரசியல் சட்டத்தில் 15(4) என்ற புதிய பிரிவைச் சேர்த்ததன் மூலம், முதல் திருத்தமே கொண்டு வரப்பட்டது. இடஒதுக்கீட்டுக் கொள்கையில் தமிழ்நாடு அனைத்திந்தியாவிற்கும் முன்னோடி மாநிலமாக, முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகின்றது.

இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கத்தினைச் சிறப்புடன் செயல்படுத்துகிற வகையில், பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு அளவு 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக, தமிழ்நாடு அரசால் 1980-ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது.

இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் தொழிற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதிலும், அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பினைப் பெறுவதிலும் கணிசமான பயன் பெற்று வருகின்றனர்.

**சட்டமன்றத் தீர்மானம்**

பல்லாண்டுக் காலமாக அமலில் உள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கை காரணமாகத் தமிழ்நாட்டில் சமுதாய மேம்பாடும், பொருளாதார உயர்வும் மக்களிடையே குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே பரவலாகக் கூடிய சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மைய அரசு, மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வேளையில், மைய அரசு தமிழ்நாட்டில் உள்ளது போலப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று என்னால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை 30.9.1991 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியது. நானும் இந்திய நாட்டுப் பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதினேன்.

**நீதிபதி பாராட்டு**

மண்டல் வழக்கு விசாரணைகளில் இந்திய உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நிலை தெளிவாக விளக்கப்பட்டது. நாம் மேற்கொண்ட நிலையினை நீதிபதி திரு எஸ். ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் பாராட்டினார். மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பிற்கு மதிப்பளிக்கும் அதே வேளையில், தமிழ்நாடு அரசு இந்திய உச்ச நீதிமன்றத்தில் இடஒதுக்கீட்டிற்கு வரம்பு விதிப்பது போன்றவற்றிற்கு எதிரான மறுஆய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

நமது நிலையினை மீண்டும் வலியுறுத்த உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுதாக்கல் செய்ய உள்ளோம். தமிழ்நாட்டில், அமலில் உள்ளது போன்ற இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக நிலையை மேம்படுத்த மிகவும் அவசியமானதாகும்.

**சட்டத்திருத்தம் வேண்டும்**

இடஒதுக்கீட்டுக் கொள்கையில் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள நிலையினையும், அதன் நெறியினையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வரை அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கத்தினை மைய அரசுக்கு வற்புறுத்துவதோடு, மைய அரசு அதை ஏற்றுக்கொண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இதற்கான திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும் வலியுறுத்தி நான் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கூறியுள்ளார்.

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25 % w.e.f. 1.7.93 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

அணுசக்தி - ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று பணிகளுக்குமே இந்த மகத்தான சக்தி பயன்படுகிறது என்றாலும், ஆக்கப்பூர்வமான வளர்ச்சிப் பணிகளுக்கு மட்டுமே இந்தியா இதனைப் பயன்படுத்தி வருவது நமக்கெல்லாம் பெருமையளிக்கும் விஷயமாகும்.

சென்னைக்கு அருகில் உள்ள கல்பாக்கம் அணுமின் நிலையம் இதற்குச் சான்றாகத் திகழ்கிறது. மரபுசார் எரிசக்தி வளங்கள் வெகுவாகக் குறைந்து வரும் நேரத்தில் நாம் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற அணுமின் நிலையம் வருங் காலத்தில் பெரும் பங்காற்றும்.

பல்லவர்களின் சிற்பத்திறனுக்குச் சான்றாகத் திகழும் மாமல்லபுரத்தில் இருந்து ஏழு கி.மீட்டர் தொலைவில், நவீன இந்தியாவின் சாதனைக்குச் சான்றாகக் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டு மாபெரும் குவிந்த மண்டபங்கள் திகழ்கின்றன.

**சிறப்பம்சங்கள்**

கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு மற்றொரு பெருமையும் உண்டு. நாட்டிலேயே முதல் முறையாக நமது பொறியியல் வல்லுனர்கள் - அறிவியலாளர்களால் முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டு இயக்கி வைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையம் இதுவாகும். இதன் பராமரிப்பும் நமது தொழில் நுட்ப வல்லுனர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத் தக்கது.

கல்பாக்கம் நிலையத்தின் கட்டுமானப் பணியில் ஒரு சிறப்பம்சமாகக் கடல் படுகைக்கு 200 அடி கீழே தோண்டப்பட்டுள்ள சுரங்கப்பதையைக் குறிப்பிடலாம். கடினமான பாறைகளைக் குடைந்தெடுத்து இந்தச் சுரங்கப்பாதை உருவாக்கப்பட்டுள்ளது. டர்பைன் கண்டன்சரைக் குளிர்விப்பதற்காக மணிக்கு 1,20,000 டன் கடல் நீர் இதன் வழியாக உள்ளே கொண்டு வரப் படுகிறது. இது இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத தனித்தன்மையாகும்.

கல்பாக்கம் நிலையத்தின் முதல் பிரிவு 1983-ஆம் ஆண்டு ஜூலை இரண்டாம் தேதியன்று உற்பத்தியைத் தொடங்குவதற்கான உச்சகட்ட நிலையை அடைந்தது. அம்மாதம் 23-ஆம் தேதியன்று தென்னக மின் தொகுப்புடன் இது இணைக்கப்பட்டது. அமைதிப் பணிகளுக்கே அணுமின் சக்தி என்ற இந்தியாவின் இலட்சியப் பாதையில் இது ஒரு முக்கியமான மைல் கல்லாகும். இந்தப் பிரிவு இவ்வாண்டு ஜூலை 23-ஆம் தேதியன்று வெற்றிகரமான பத்தாண்டுகளைக் கடந்து பதினோராவது ஆண்டில் அடி எடுத்து வைத்தது. இந்நிலையத்தின் இரண்டாவது பிரிவு மேலும் இரண்டு ஆண்டுகள் கழித்து, அதாவது 1985 ஆகஸ்ட் 12-ஆம் தேதியன்று உச்சகட்ட மின் உற்பத்தி நிலையை அடைந்தது. அதே ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதியன்று இந்தப் பிரிவு தென்னக மின் தொகுப்புடன் இணைக்கப்பட்டது.

# கல்பாக்கம் அணுமின் நிலையம்



**எம்.பி.சி.**

சென்னை அணுமின் நிலையம் 1987-இல், நியூக்ளியர் மின்சக்திக் கழகத்தின் (என்.பி.சி.) ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேலும் நான்கு அணுமின் நிலையங்கள் இந்தக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. தாராபூர் (2x160 மெகாவாட்), இராஜஸ்தான் (2x200 மெகாவாட்), நரோரா (2z220 மெகாவாட்), மற்றும் கக்ராபார் (2உ220 மெகாவாட் - இதன் இரண்டாம் பிரிவு இவ்வாண்டு இறுதிக்குள் உச்சகட்ட நிலையை அடையக்கூடும்.) ஆகியவை இந்த நான்கு நிலையங்களாகும். இவை தவிர, கர்நாடகாவில் கைகா (2x200 மெகாவாட்), இராஜஸ்தான் (2x220 மெகாவாட்) ஆகியவையும் உருவாகி வருகின்றன. விரைவில் நாட்டின் முதலாவது 500 மெகாவாட் பிரிவுகள் தாராபூரில் இயங்கத் துவங்கும்.

**கல்பாக்கம் - அறிமுகம்**

கல்பாக்கம் அணுமின் வளாகம் 2,500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையமும் இதே வளாகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்நிலையத்தில் பணியாற்றும் 2,000 பணியாளர்களுக்கான (200 பொறியாளர்களும், அறிவியலாளர்களும் இதில் அடங்குவர்) குடியிருப்புகளும் உண்டு.

தற்சமயம் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரு பிரிவுகள் தலா 170 மெகாவாட் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அணுஉலை கலத்தினுள் எளிதில் எட்ட இயலாத பகுதியில் கனநீர் வழங்கீடு சாதனத்தின் 1988-இல் ஏற்பட்ட ஒரு கோளாறையடுத்து, நிறுவு திறனை விடவும் குறைவான அளவிலேயே இங்கு மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இதைத் தொடர்ந்து அணு சக்தி முறைப்படுத்தும் வாரியம் குறைந்த அளவில் மின் உற்பத்தி செய்யுமாறு அறிவுறுத்தியது. இந்த இரு பிரிவுகளின் நிறுவு திறனான தலா 220 மெகாவாட் நிலையை மீண்டும் எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடிவமைப்புகளில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் இதனை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பான்மையான மக்கள் நினைப்பது போல அணுமின் சக்தி உற்பத்திக்கு அதிகச் செலவு பிடிப்பதில்லை. சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள சில அனல்மின் நில்லயங்களில் ஒரு

## தஞ்சை மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை!

தஞ்சை மாவட்டத்தில் ஒரு புதிய நவீன அரிசி ஆலை ரூ.7.5 கோடி செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது, நாள் ஒன்றுக்கு 440 டன் நெல்லை அரைக்கும் திறன் கொண்டதாக இருக்கும். தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல், கால்நடைத் தீவனம் முதலிய உபதொழில்களும் இந்த அரிசி ஆலை மூலம் நிறுவப்படும். இந்தப் புதிய நவீன அரிசி ஆலை தனியார் துறை மூலம் அமைக்கப்படும்.

யூனிட் மின் சக்தி உற்பத்தி செய்திட ரூ.1.25 செலவாகின்றது. அத்தோடு ஒப்பிடுகையில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் மின் உற்பத்திச் செலவு யூனிட்டுக்கு 75 காசுகள் மட்டுமே.

### எரி பொருள் கலவை

கல்பாக்கம் நிலையத்தில் உள்ள அணு உலைகளில் யுரேனியத்தை எரி பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். சம நிலைப்படுத்தும் இடைப் பொருளாக கன நீர் பயன்படுகிறது. நமது நாட்டில் கிடைத்துவரும் நமது அணுமின் நிலையங்களுக்கான எரிபொருள் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்கும்? என்ற ஒரு கேள்வி எழுவது இயற்கையே. தற்சமயம் இந்தியாவில் போதுமான அளவில் உள்ள இயற்கை யுரேனியம் (யு-238) அடுத்த நூற்றாண்டின் பாதி வரையில் ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் மெகாவாட் என்ற விகிதத்தில் மின் உற்பத்தி செய்வதற்குப் போதுமானது என மதிப்பிடப்பட்டுள்ளது. பீகாரில் உள்ள ஜடுகுடா சுரங்கத்தில் இருந்து யுரேனியம் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. ஐதராபாத்தில் உள்ள அணு சக்தித் துறையின் நியூக்ளியர் எரிபொருள் வளாகத்தில் இது பதப்படுத்தப்படுகிறது.

அணு உலையில் பயன்படுத்தப்படும் கன நீரும், நாட்டின் பல்வேறு பாகங்களில் அமைந்துள்ள அணு சக்தி துறையின் நிலையங்களில் இருந்து பெறப்படுகிறது. தூத்துக்குடி, கோட்டா, தால்சேரி. பரோடா, மனகுரு ஆகிய இடங்களில் உள்ள கனநீர் நிலையங்கள் கனநீர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

சில ஆண்டுகளுக்கு முன்பு, 1986-இல், முன்னாள் சோவியத் யூனியனில் உள்ள செர்நோபில் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து, இத்தகைய அணுமின் நிலையங்களின் பாதுகாப்புத் தன்மை குறித்து மக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டது. சில சமயம் இது தேவையற்ற பீதியாகவும் உருவாகிறது. செர்நோபில் விபத்துக்குப் பல ஆண்டுகள் முன்பாகவே கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் கட்டுமான மற்றும் இயக்க அளவில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இரு சுற்றுத் தடுப்புகள் கொண்டதாக அணு உலை அமைந்துள்ளது. ஏதேனும் விபத்து ஏற்படும் சமயத்தில், இவை கதிர் வீச்சைப் பெருமளவில் குறைத்துவிடும்.

இவ்வாண்டு மார்ச் மாதம் நரோரா அணுமின் நிலையத்தின் டர்பைன் பிரிவில் தீ விபத்து ஏற்பட்டது. இது டர்போ ஜெனரேட்டர் பகுதியில் மட்டுமே நிகழ்ந்தது. அணுஉலைப் பகுதிக்கு இதனால் பாதிப்பு ஏதுமில்லை. எனினும் கூட ஒரு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, நாட்டிலுள்ள அனைத்து அணுமின் நிலையங்களிலும் டர்போ ஜெனரேட்டர்களை முழுவதுமாகப் பரிசோதிப்பதற்கான திட்டமொன்றை அணு சக்தி முறைப்படுத்தும் வாரியத்தின் ஆணைப்படி என்.பி.சி. மேற்கொண்டுள்ளது. இதில் முதல் கட்டமாக, கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவில் மின் உற்பத்தி ஜூலை 31-ஆம் தேதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. டர்போ ஜெனரேட்டர் ஆய்வுப் பணி ஒரு மாதம் நிகழக்கூடும்.

### சுற்றுச் சூழல் விளைவுகள்

சுற்றுச் சூழல் பாதுகாப்பு நோக்கில் ஒப்பிடும்போது கூட அணுமின் நிலையங்களைக் காட்டிலும் அணுமின் நிலையங்களில் பயன்படும் எரிபொருள் தூய்மையானது என்றே கூறலாம். அனல்மின் நிலையங்கள் புவியின் வெப்ப நிலையை அதிகரிக்க வழிகோலுகின்றன. அமில மழைப் பொழிவிற்கும் காரணமாய் அமைகின்றன. ஆனால், அணுமின் நிலையங்களில் இத்தகைய மாசுக்கேடுகள் இல்லை. அணுமின் நிலையத்தின் சுற்று வட்டாரத்தில் உள்ள நீர், காற்று, மண், கடல் உயிரினங்கள் ஆகியவற்றில் மாசுக்கலப்பு ஏதேனும் தென்படுகிறதா என்பதைத் தொடர்ந்து முறையான வழிகளில் கண்டறிய – கல்பாக்கத்தில் 'சுற்றுச் சூழல் ஆய்வுக் கூடம்' முழு சுதந்திரத்துடன் செயல்பட்டு வருகிறது. கல்பாக்கம் நிலைய வளாகத்தின் சுற்றுச் சூழல் நிலவும் கதிர் வீச்சு அளவு அப் பகுதியில் இயற்கையாகக் காணப்படும் அதே அளவில் அல்லது அதை விட மிகச் சொற்ப அளவில்தான் கூடுதலாக உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கல்பாக்கம் நிலையத்தின் இரு பிரிவுகள் சற்றேறக் குறைய கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வந்த போதிலும் இதனால் சுற்றுச் சூழலுக்குப் பாதக விளைவு ஏதுமில்லை என்பது சேகரிக்கப்பட்டுள்ள தகவல்கள் மூலமாக உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

### வருங்காலத் திட்டங்கள்

தற்போது இந்தியாவில் உள்ள அணுமின் நிலையங்கள் நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் இரண்டு சதவிகிதப் பங்கை ஏற்றிருக்கின்றன. இதனை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பத்து சதவிகிதமாக உயர்த்திட நியூக்ளியர் மின் சக்திக் கழகம் திட்டமிட்டுள்ளது.

கல்பாக்கத்தைப் பொறுத்த வரையில் ஐந்நூறு மெகாவாட் திறன் கொண்ட அணு உலையை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டம் உள்ளது. இதற்கான வடிவமைப்பு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பரிசோதனை அணுஉலை ஒன்று இந்த வளாகத்திலேயே அமைந்துள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் 16 மெகாவாட் மின் உற்பத்தியைச் செய்து வருகிறது. இத்தகைய ஃபாஸ்ட் ப்ரீடர் அணுஉலைகள், ப்ளுடோனியம் மற்றும் யுரேனியத்தை எரிபொருளாகக் கொண்டு செயல்படும். தற்போது இயக்கத்தில் உள்ள அணு உலைகளில் பயன்படுத்தப்படும் எரிபொருள் கழிவை மூல எரிபொருளாகவும், தோரியத்தை அணு உலையைச் சுற்றியமையும் போர்வையாகவும் கொண்டு இவை செயல்படும்.

# நூல் நயம்

### நல்ல கணவனாக இருப்பது எப்படி?

**ஆசிரியர்: டாக்டர் மு. முத்துக்காளத்தி**
**விற்பனை உரிமை: பாரி நிலையம்**
184, பிராட்வே
சென்னை-108

பக்கம்:12 விலை:ரூ.96/-

இல்லறம் நல்லறமாக விளங்க, கணவனும் மனைவியும் இணைபிரியாத் தம்பதிகளாக உண்மையில் வாழ வேண்டும். அதற்குத் தம்பதியரிடையே ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் இருந்திடல் இன்றியமையாததாகும்.

'நல்ல மனைவியாக இருப்பது எப்படி?' என்று எழுதிய இந்நூலாசிரியரே, இப்போது 'நல்ல கணவனாக இருப்பது எப்படி?' என்ற நூலையும் எழுதியிருக்கிறார். இதில் அவர் பல அற்புதமான கருத்துக்களைக் கூறுகிறார். எடுத்துக்காட்டுக்கு, கணவன், மனைவியின் அன்பைப் பெற 50 வழிகளைக் கூறுகிறாரே அதுவே போதுமே!

இல்லறத்தில் இருக்கவேண்டிய இன்றியமையாத நூல்.

### திருக்குறள் (எளிய உரை - இனிய நடை)

**ஆசிரியர்: ஞா. மாணிக்கவாசகன்**

வெளியீடு: உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித் தெரு
மண்ணடி,
சென்னை-1.

பக்கம்:304 விலை:ரூ.16/-

வான்புகழ் வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குப் பல்வேறு காலகட்டங்களில் பலர் உரை எழுதிப் பேரும் புகழும் பெற்றுள்ளார்கள்.

அந்த வகையில், எளிய உரையும், இனிய நடையும் கொண்டு விளங்குகிறது. இந்நூல் - அழகிய அச்சமைப்பு. உரை ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

### சாக்ரடீஸின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

**ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்**
**வெளியீடு: பாரதி நிலையம்**
108, உஸ்மான் சாலை
சென்னை-17.

பக்கம்:96 விலை:ரூ.12/-

'உன்னையே நீ அறிவாய்' என்னும் உண்மையை உலகுக்கு உணர்த்திய தத்துவஞானி சாக்ரடீஸ். அவர் முழங்கிய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பல சரம் சரமாய்க் கோக்கப்பட்டிருக்கிறது. சாக்ரடீசின் வாழ்க்கைக் குறிப்போடு, அவரது அனுபவ மொழிகளையும் இணைத்திருப்பது பயனுள்ளது.

### நெஞ்சக் கனல்கள்

**ஆசிரியர்: முனைவர் சரளா இராசகோபாலன்**
**வெளியீடு: ஒளிப் பதிப்பகம்**
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18.

பக்கம்:96 விலை:ரூ.12/-

கவிஞரின் எண்ணங்கள் கவிதைகளாக மலர்ந்திருக்கின்றன. பெண்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது,

பெண்மை, உழைப்பின் முதுகெலும்பு என்று கூறுகிறார். அதுமட்டுமா?

பெண்மை, திருமணச் சந்தையில் நகை தாங்கிகள்! – என்று இன்றைய சூழலைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதுபோன்ற பல கவிதை வரிகள் சமுதாயத்திலே காணப்படும் சிலரது முகவரிகளைக் காட்டுகின்றன. எல்லாமே சிந்தனைச் சிதறல்கள். படித்து மகிழ - பயன்பெற நல்ல தொகுப்பு.

— மறைமலை

### உங்கள் கரங்களில் புத்தகம்

**ஆசிரியர்: மூவேந்தர் முத்து**
**வெளியீடு:**
மூவேந்தர் பதிப்பகம்,
29/2, சீனிவாசப் பெருமாள்
சன்னதித் தெரு,
சென்னை-600 014.

பக்கம்:52 விலை:ரூ.10/-

ஒரு புத்தகம் எப்படித் தயாராகின்றது என்பதை விளக்கும் நூல் இது.

அச்சுக் கோப்பதிலிருந்து, பைண்டிங் வரையுள்ள அச்சுப் பணிகளை எல்லாத் திறத்தாரும் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். விளக்கப்படங்களும் உள்ளன. மாணவர்கள் படித்துப் பயன் பெறலாம்.

—பி.வி.ஜி.

### 'கடல் முத்து'

**ஆசிரியர்: பூவை. எஸ். ஆறுமுகம்**
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
தபால்பெட்டி எண்-501
பார்க்டவுன், சென்னை-600 003.

பக்கம்:126 விலை:ரூ.26/-

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்களில் நடக்கும் சம்பவங்களாக இச் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. மாவட்டப் பேச்சு மொழியோடு ஆசிரியரின் வர்ணனைகளும் ரசிக்கும் படியாய் உள்ளன.

ஒவ்வொரு கதையின் முடிவும் நினைவில் நிற்கும்வண்ணம், நன்றாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. தினக் கூலிகள், பிச்சைக்காரர்கள், நடிகை, மிராசுகள், இவர்களின் நியாயமான-அநியாயமான ஆசைகள்தாம் கதைகள்.

'ஞான் ஒரு இந்தியனான', 'கடல் முத்து' ஆகிய கதைகள் சிறப்பானவை. ஆனால், இக்கதைகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை என்பதை நினைவுறுத்திக் கொண்டு படிக்க வேண்டும்.

### 'இடைவேளை இடைவெளியல்ல'

**ஆசிரியர்:**
ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்
**வெளியீடு:**
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

பக்கம்:176 விலை:ரூ.23/-

புதிதாகத் திருமணம் ஆன வேலைக்குச் செல்லும், கணவன்-மனைவியின் ஆசைகள், ஏமாற்றங்கள் எதிர்பார்ப்புகள் இவற்றை விவரிப்பதுதான் முதல் நாடகத்தின் கரு. தங்களின் பிரச்சினைகளை இருவரும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவுக்கு வருகிறார்கள். டாக்டரும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்யும் கூத்துக்கள் இரண்டாவது நாடகம். இரண்டு காவலர்கள் வெகுளித்தனத்தோடு ஏமாறுவது சற்று மிகை என்றாலும் சிரிப்புக்காக அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். மூன்றாவது நாடகம் இது.

குருசாமிக்கு வசவுகளை வாங்கித்தரும் ஊறுகாய் பாட்டிலை அவர் வெறுத்து ஒதுக்கினாலும் மீண்டும் மீண்டும் அது அவரிடமே வந்து ஒட்டிக் கொண்டு இறுதியில் அவருக்கு வேலை கிடைக்கக் கடினமாய் இருந்து தெய்வ நிலைக்கு உயர்வது நான்காம் நாடகம். இந் நகைச் சுவை நாடகங்கள் நான்கும் சிடுமூஞ்சியின் முகத்தில்கூட சிரிப்பை வரவழைத்து விடும். நகைச்சுவை விரும்பிகளுக்கு இந் நூல் நல்ல பரிசு.

—குமாரசாமி

## வளரும் வேளாண்மை

# பூச்சிக் கொல்லிகளை உபயோகிப்பது எப்படி?

டாக்டர் ஆர். விஜயராகவன்
திட்டப்பிரிவு துணை இயக்குநர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### செய்யக் கூடியவை என்னென்ன?

◉ தெளிப்பானுக்குத் தக்கவாறு மருந்துக் கரைசலைத் தயார் செய்து கொள்ள வேண்டும். மருந்தடிக்கும் முன்பும், பின்பும் தெளிப்பானை நன்றாகக் கழுவ வேண்டும்.

◉ மருந்து தெளித்தபின், கை, கால்களைச் சோப்பு போட்டு நன்கு கழுவிய பிறகே மற்ற வேலைகளைச் செய்யவேண்டும்.

◉ பூச்சிமருந்து கொள்கலனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பேடுகளைக் கவனமாகப் படிக்க வேண்டும்.

◉ மருந்து தெளிப்போர், முகத்தை மறைத்தும், கண்ணாடி அணிந்தும் மருந்து தெளிக்க வேண்டும்.

◉ பூச்சி மருந்துடன் பூஞ்சாணக் கொல்லி சேர்த்துத் தெளிக்க வேண்டியிருந்தால், அதனுடன் இணக்கமான பூஞ்சாண மருந்துகளைத் தான் கலந்து தெளிக்க வேண்டும்.

◉ அதிகாலை வேலைகளிலும், மாலை வேளைகளிலும் மட்டும் பூச்சி மருந்து தெளிக்கவோ தூவவோ செய்ய வேண்டும்.

◉ மருந்தடிக்க வயலில், தெளிக்கப் பட்ட மருந்து, தேதி மற்றும் பூச்சிக் கொல்லிகளின் அளவுகளைக் கையேடுகளில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

◉ திரவ மருந்துகளையும், திட மருந்துகளையும் தனித்தனியே சேமிக்க வேண்டும்.

◉ பூச்சிக்கொல்லி மருந்துகளை, குளிர்ந்த, உலர்ந்த நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்குகளில்தான் சேமிக்க வேண்டும்.

◉ பூச்சிக்கொல்லிகளை, பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளில், தேவை ஏற்பட்டால் மட்டுமே உபயோகப் படுத்த வேண்டும்.

### செய்யக் கூடாதவை யாவை?

◉ பூச்சி மருந்துகளை, வீட்டில் உபயோகிக்கும் மருந்துகள், உணவுப் பண்டங்களின் அருகில் வைக்கக் கூடாது.

◉ குழந்தைகள் கைக்கு எட்டாதவாறு வைக்க வேண்டும்.

◉ பூச்சி மருந்தைக் கலக்கும்போது, கைகளினால் கலக்கக்கூடாது.

◉ பூச்சி மருந்து தெளிக்கும்போது, உணவருந்துதல், புகைபிடித்தல், வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது.

◉ குழல் மூலம் பூச்சி மருந்தை உறிஞ்சக்கூடாது.

◉ மருந்தடிக்கப்பட்ட வயலுக்கு அருகில் ஆடு, மாடுகளை மேய விடக்கூடாது.

◉ மருந்தடிக்கப்பட்ட காய்கறிச்செடி அல்லது பழமரங்களிலிருந்து, குறைந்தது பதினைந்து நாட்களுக்கு காய் அல்லது பழங்களைப் பறிக்கக் கூடாது.

---

**நெல்லை மாவட்டம்: ஒருவரிச் செய்திகள்**

★ இன்னிஸ் என்னும் ஆங்கிலேயத் தளபதிதான், நெல்லை-கட்டபொம்மன் மாவட்ட மண்ணில் முதன் முதல் கால்வைத்தவன்.

★ ஷாஜகான் காலத்தில் கட்டிய சத்திரம், நாராயணம் மான்புரத்தில் உள்ளது.

★ 'தென்னாட்டு ரோமாபுரி' எது தெரியுமா? வடக்கன் குளம்.

★ மக்கள் தொகை குறைந்த அளவுள்ள ஊர், பட்டைக் குறிச்சி.

★ கைதேர்ந்த கொத்தர்களுக்குப் பெயர் பெற்ற ஊர், நெற்கட்டுஞ் செவ்வல்.

★ தமிழ்நாட்டிலேயே சிறிய வட்டம்; செங்கோட்டை.

★ காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் பிறந்த ஊர், சென்னிகுளம்.

★ கதர் உற்பத்திக்கு முக்கிய இடமாக இருந்துவருவது, குருவிக் குளம்.

★ சிவசைலத்திற்கு மற்றொரு பெயர் அன்பூர்.

★ வ.உ.சி., பாரதியார் இந்துக் கல்லூரி மாணவர்கள்.



# மத நல்லிணக்க நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், 20.8.93 அன்று கலைவாணர் அரங்கில், மத நல்லிணக்க நாள் விழா சிறப்புற நடைபெற்றது.

பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியர், தேசிய, மத ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையிலும், மனித நேயம், சகோதரத்துவம், ஒற்றுமை உணர்வு, இந்தியக் கலாச்சாரம் போன்ற மனிதனுக்குத் தேவைப்படுகின்ற குணங்களில் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற வகையிலும், பல தரப்பட்ட கலைநிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினார்கள்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், கீழ்க்கண்டவாறு மத நல்லிணக்க விழா உறுதிமொழியை வாசிக்க, விழாவிற்கு வருகை தந்த அனைவரும் எழுந்து நின்று, ஒன்று சேர்ந்து வாசித்து உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

''சாதி, சமயம், கொள்கை, வட்டாரம், மொழி ஆகியவற்றைக் கடந்து, இந்திய நாட்டின் மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாக ஒன்றுபடவும், நல்லிணக்கம் கொள்ளவும் பாடுபடுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன். தனிப்பட்டவர்களிடையிலோ, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களிடையிலோ எழுகிற கருத்து வேறுபாடுகளுக்கு வன்முறை தவிர்த்து, பேச்சு வார்த்தைகள் மூலமாகவும், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டும் தீர்வு காண்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்''

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகையில் பேசியதாவது:

''மறைந்த முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளை மத நல்லிணக்க நாள் விழாவாக இங்கு கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அனைத்து மத வழிபாடுகளிலும் அன்பு, பக்தி போன்றவையே முக்கிய அங்கமாக இருக்கின்றது. மகாவீரர், ஏசு,






நபிகள் போன்றவர்களின் மார்க்கம் அன்பு மார்க்கமும், மனித நேய மார்க்கமுமாகத் தான் இருந்திருக் கின்றது. இந்துக்களும், இஸ்லாமியர் களும் பழங்காலத்திலிருந்தே ஒற் றுமை உணர்வுடனும், மத ஒருமைப் பாட்டைக் காத்தும் வாழ்ந்திருக் கிறார்கள் என்பதற்கு இப்ராஹீம்கான் வரலாறு மற்றும் திப்புசுல்தான் வரலாறும் நமக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் அனை வருக்கும் தாழ்வு'' என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. மனிதநேயம், அறிவு, உண்மை, நாணயப்பண்பு, பொதுநலம் போன்றவை வளர வேண்டும். அவற்றுக்கு மதிப்புத் தரவேண்டும். ஒருமைப்பாட்டுத் தன்மை பேணப்பட வேண்டும்''.

தவத்திரு ஊரனடிகள் அவர்கள் சிறப்புரையாற்றியபோது கூறிய தாவது:

''இன்று நாம் மத நல்லிணக்க நாள் விழாவைக் கொண்டாடு கிறோம். மிக்க மகிழ்ச்சி. அரசியல் கொள்கைகளாலே அரசியல் கட்சிகள் வேறுபட்டிருப்பது போல, ஆன்மீகக் கொள்கையிலே மதங்கள் வேறுபடு கின்றன. அன்று இருந்த முடியாட்சி போய் இப்போது குடியாட்சி வந் திருக்கிறது. ஆக ஆட்சி என்பது ஒன்றுதான். மனிதர்களின் உடல் குட்டை, நெட்டை என்றும் கருப்பு, சிவப்பு என்றும் பேதமிருக்கலாம். ஆனால், யாவருக்கும் உயிர் ஒன்று

மத நல்லிணக்கம்:

## மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்!

இந்தியாவில் பல இடங்களில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தபோதிலும் தமிழ்நாடு என்றும் தொடர்ந்து அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டு வரு கிறது. தமிழ்நாட்டு மக்கள் சாதி, மொழி, சமய உணர்வுகளைக் கடந்து, அமைதியைக் கடைப் பிடிக்கும் மரபையும், பாரம்பரியத்தையும் கொண்ட வர்கள். மதத் தொடர்பான ஊர்வலங்கள், பொது இடங்களில் கூட்டுத் தொழுகை போன்ற நிகழ்ச்சி களை, சில தீயசக்திகள் பயன்படுத்திக் கொண்டு, வன்முறையில் ஈடுபட்டு சட்ட-ஒழுங்கு பிரச்சினை களை ஏற்படுத்தி வருகின்றன என்பதால், இது போன்ற மத ஊர்வலங்கள் மற்றும் கூட்டுத் தொழுகை போன்றவைகளைத் தவிர்ப்பது நல்லது என்ற கருத்தைப் பெரும்பாலான பொதுமக்கள் கொண்டுள்ளனர்.

மத நல்லிணக்கத்திற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் செயல்களுக்கு வாய்ப்புகள் தரக்கூடாது என்று பெருவாரியான தமிழகப் பெருங்குடி மக்கள் விரும்புகிறார்கள். பொது மக்களின் இந்த ஏகோபித்த கருத்தினை எங்கள் அரசும் முழுமையாக ஏற்கின்றது. எனினும் தமிழகத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் இதற்கு முழுமையாக, மனமார்ந்த முழு ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட வேண்டுகோள்.

பொது அமைதியைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு மிலாது-நபி மற்றும் விநாயகர் சதுர்த்தி ஆகிய பண்டிகைகள் தொடர்பாக ஊர்வலங்கள் மற்றும் பொது இடங்களில் கூட்டுத் தொழுகை போன்றவைகள் நடக்க வேண்டாம் என்று தமிழக அரசு கருதுகிறது.




தானே. அதில் வித்தியாசப்பட ஒன்றுமில்லை. மத ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்க, நாம் விழா நடத்திக் கொண்டிருக்கும் இந்த மேடை ஒன்றே போதுமானது. அனைத்து மத, சமயப் பெரியோர்களும் ஒரே இடத்தில் ஒன்று கூடியிருக்கிறார்களே. இது போதாதா! . இந்த மேடை போல உலகம் ஆகி விடக்கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது. வள்ளலார் கூறியது போல் ''எம்மதமும் சம்மதம்'' என்பதை அனைவரும் உணர வேண்டும்''



ஆர்க்காடு இளைய இளவரசர் திரு நவாப் காதர் முகமது அப்துல் அலி, அருள் திரு ஐ. எபநேசர் இமானுவேல், பஞ்சாப் சங்கத் துணைத் தலைவர் திரு பி.எஸ்.கிராவல், மாநில சிறுபான்மையினர் நல ஆணைய உறுப்பினர் திரு மோகன்சந்த் தாதா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம். இராமன், இ.ஆ.ப., செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலீ, இ.ஆ.ப., ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

முன்னதாக, பொதுத்துறைச் செயலர் திரு பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் (நிர்வாகம்) திரு சுந்தரநாதன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு செயப்பிரகாசம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்



## உலகச் சுற்றுலா நாள் முன்னேற்பாடுகள்!

தமிழகத்தில் சிறப்பைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழகத்தில் நடைபெறும் விழாக்களைச் சிறப்புடன் நடத்தி, அதைக் காணப் பல நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் தமிழகத்திற்கு ஈர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக 23.8.93 அன்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு நாகூர் மீரான் அவர்கள் தலைமையில், சென்னைத் தீவுத் திடலில் அமைந்துள்ள தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகத்தில் முன்னேற்பாடு கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் செப்டம்பர் 27-இல் நடைபெறும் உலகச் சுற்றுலா விழா 1994-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் குன்னூரில் நடைபெற விருக்கும் தேயிலை மற்றும் சுற்றுலா விழா ஆகியவற்றை எவ்வாறு சிறப்புடன் நடத்துவது என்பது பற்றி இக்கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. கூட்டத்தில் செய்தி சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இந்திய அரசு சுற்றுலாத் துறை மண்டல இயக்குநர் திருமதி பூர்ணிமா சாஸ்திரி, தென் இந்திய விடுதிகள் மற்றும் உணவகங்கள் சங்கச் செயலர் திரு நாகேந்திர பிரசாத், தென் மண்டல கலாச்சார மைய இயக்குனர் திரு ஏ. சுகுமார், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி உமாமகேஸ்வரி ஆகியோர் உட்பட சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல தொழில் அதிபர்கள், பிரமுகர்கள், அதிகாரிகள் ஆகியோர் பங்கு கொண்டனர். கூட்டத்தில் பங்கு கொண்ட அனைவரையும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு நாகூர் மீரான் அவர்கள் வரவேற்றுக் கூட்ட நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் உலகச் சுற்றுலா தின விழாவை செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 3-ஆம் தேதி வரை ஏழு நாட்கள் சென்னையில் சிறப்பாகக் கொண்டாடவும், விழாவின் அங்கமாகத் தமிழகக் கலை நிகழ்ச்சிகளுடன் பிற மாநில கலை நிகழ்ச்சிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கான ஓவியப் போட்டி, சுற்றுலா பற்றிய விழிப்புணர்வு ஏற்பட தொடர் ஓட்டம், அருங்காட்சியக அரங்கில் சுற்றுலா வளர்ச்சி பற்றி சுவரொட்டிக் கண்காட்சி, சுற்றுலாப் பயணிகளுக்கான சிறப்பான வரவேற்பு ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்த தீர்மானிக்கப்பட்டது. இறுதி நாளான அக்டோபர் 3-ஆம் நாள் கலைவாணர் அரங்கில் சுற்றுலா அமைச்சர் தலைமையில் நிகழ்ச்சிகளை நடத்தவும் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1994-ஆம் ஆண்டில் சனவரித் திங்களில் குன்னூரில் நடைபெறும் தேநீர் மற்றும் சுற்றுலா விழா பற்றி உலக அளவிற்கு விளம்பரப்படுத்தவும் அவ்விழாவிற்குப் பல்நூறு பயணிகளைக் குழுவாக அழைத்து வருமாறும் பயண முகவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏர் இந்தியாவின் அனைத்து வெளிநாட்டு அலுவலகங்களும் இவ்விழா பற்றிய சுவரொட்டிகளுக்காக முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வாண்டு ஜெய்ப்பூரில் நடைபெற விருக்கும் இந்தியப் பயண முகவர்கள் சங்கத்தின் கருத்தரங்கத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கு கொண்டு தமிழகம் பற்றி சிறப்பான விளம்பரங்களைச் செய்யவும் பயணிகளை அதிக அளவில் தமிழகத்திற்கு வரவழைக்கவும் முடிவு எடுக்கப்பட்டது. கூட்ட இறுதியில் தென் இந்திய விடுதிகள் மற்றும் உணவகங்கள் சங்கத்தின் தலைவர் திரு பாலகிருஷ்ண ராவ் நன்றி கூறினார்.

## அண்ணா போற்றிய பெருமக்கள்

### சர். பி. தியாகராயர்



**தியாகராயர் தம்முடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிடச் சமூகத்தில் ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார்.**

**தியாகராயர் போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார். அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின்கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.**

# தமிழ்த் தென்றல் திரு.வி.க.

— இல. பழனியப்பன்

**1993** ஆகஸ்டு 26-ஆம் நாள் தமிழ் உள்ளங்களின் தூய திருவிழா. ஆம். அந்நிய ஆதிக்கத்தால் கொத்தடிமையாய் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ்ச் சமுதாயத்தை வீறுகொண்டு எழச் செய்த வீர மகன் திருவாரூர் வி. கல்யாண சுந்தரனாரின் நூற்றாண்டுப் பெரு விழா.

தனது முன்னோர்கள் வாழ்ந்த திருவாரூரைத் தன் பெயரின் முன்னே இணைத்துக் கொண்டு வாழ்ந்த திரு.வி.க. அவர்கள், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த 'துள்ளம்' என்னும் சிற்றூரில் விருத்தாசலம் சின்னம்மை தம்பதிகளின் ஆறாவது மகனாக 1883-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26-ஆம் நாள் தமிழகம் செய்த நற்பயனால் இம் மண்ணில் மலர்ந்தார்.

இளமையிலேயே இயற்கையாகவே இவருக்கு நாட்டுப்பற்றும், தாய் மொழிப்பற்றும் இறையுணர்வும், சமுதாய உணர்வும் அமைந்திருந்தது நாம் செய்த நற்றவத்தின் பயனேயாகும். இவரது இச்சிறப்புணர்வுகள் இவரது தந்தையார் நடத்திய சிறிய பள்ளியில் தொடங்கி சென்னை இராயப்பேட்டை ஆரியன் பிரைமரி பள்ளியில் வளர்ந்து வெசிலி கல்லூரியில் மெட்ரிகுலேசன் தேர்வில் நிறைவு பெற்றது. இவர் படித்த பள்ளி மற்றும் கல்லூரி இவருக்கு முறையாகத் தமிழ் கற்றுத் தரவில்லை. இவரது சுய முயற்சி தமிழ் அறிஞர்களை நாட வைத்து இவரைத் தமிழ்த் தென்றலாகத் தாலாட்டிப் பாராட்டி வளர்த்தது.

பொருள் மீது இவர் உள்ளம் பற்றுக் கொள்ள மறுத்தது. அருள் உள்ளம் இவரை அரவணைத்தது. ஆனால் சுய மரியாதை உணர்வு இவரை வாழ்க்கைப் பயணத்தை வழிநடத்திச் சென்றது.

பின்னி நிறுவனத்தில் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிய இவர் தொழிலாளர் விடுதலை உணர்வை ஊட்டத் தொடங்கிய காரணத்தால் நீண்ட நாள் அங்கு இருக்க இயலாது போயிற்று. பின்னர் வெசிலியன் மிசன் பள்ளியில் தமிழாசிரியர், அதன்பின் இராயப் பேட்டை வெசிலி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியர் ஆகிய பணிகளில் தனி முத்திரைப் பதித்தார். இந்தக் கால கட்டத்தில் அரவிந்தரின் 'வந்தே மாதரம்' பத்திரிகையும் திலகரின் வீர முழக்கங்களும், விபின்சந்திர பாலரின் விடுதலை முழக்கமும் இவரது நாட்டுப்பற்றை மேலும் வளர்த்து இவரை அரசியலில் ஈடுபடச் செய்தது. இந்த உணர்வு இவரது பணி வாழ்வுக்கு விடுதலை கொடுத்து பத்திரிகை வாழ்வாக உருவெடுத்தது. ஆம். தேச பக்தன், நவசக்தி இதழ்கள் வாயிலாக விடுதலை உணர்வை வளர்த்தார். புதுப் புறநானூறு படைத்தார். ஆங்கிலத்திலிருந்து தூய தமிழாக அனைத்துத் தேசியத் தலைவர்களின் வீர முழக்கங்கள் இவரது கைவண்ணத்தால் நாவன்மையால் நாடு முழுவதும் பரவி விடுதலை உணர்வைத் தமிழகத்தில் தட்டி எழுப்பியது. உலகப் பெரியார் காந்தி அடிகள் வீரத் தளபதி திலகர் ஆகிய இருவரும் இவருக்கு அரசியல் குருவாகத் திகழ்ந்தனர்.

காந்தியடிகளின் உரைகளை தமிழகத்தில் மொழி பெயர்த்து அவரின் பேரன்பைப் பெற்றவர். அவ்வாறே அன்னி பெசண்ட் அம்மையாரின் பேச்சும், எழுத்தும் இவரைப் பெரிதும் பாதித்து இவரை இந்திய காங்கிரசுப் பேரியக்கத்தில் தீவிரமாக ஈடுபடச் செய்தது. இவரது உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் எனும் நூல் பலரது உள்ளங்களைப் பக்குவப்படுத்தியது. இவர் பல் வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று நாட்டு விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளார். மூதறிஞர் இராசாசி அவர்களின் தலைமையில் வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று சிறை புகுந்த பெருமை இவருக்கு உண்டு. இவரது பேனா முனையில் கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், பஞ்சாப் படுகொலை ஆகியவை அனல் பறக்க வெளிவந்து அனைவரையும் விழிப்புணர்வு பெறச் செய்தது.

தொழிற்சங்க வரலாற்றில் திரு.வி.க. அவர்களுக்கு என்றும் தனிப் பெருமை உண்டு. ஸ்பென்சர் நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில் அப்போதைய இங்கிலாந்து நாட்டுத் தொழிற் சங்கத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கீர் ஹாட்டியைச் சந்தித்ததன் வாயிலாக, தொழிலாளர் சமுதாயத்தின் நல்வாழ்வில் ஈடுபாடு ஏற்பட்டதன் வாயிலாக வாடியா பெருமக்களுடன் சேர்ந்து இந்தியாவிலேயே முதல் முதலாகத் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தனிப் பெருமை பெற்றார்.

இதன் விளைவாக, பல்வேறு தொழிற் சங்கங்கள் சென்னையில் உருவாகி மத்திய தொழிற்சங்கம் உருவாயிற்று. மத்திய தொழிற்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிலாளர்களை நம் நாட்டின் பொறுப்புள்ள குடி மக்களாக ஆக்கும் பெரும்பணியைத் தொடங்கி வைத்தார். தொழிலாளர் களிடையே மொழியுணர்வு, நாட்டுப் பற்று, சமுதாய ஈடுபாடு, இறையுணர்வு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இன்று



ஏற்பட்டுள்ளமைக்கு திரு.வி.க. அவர்களின் இடைவிடாத் தொண்டே முக்கிய காரணமாகும். தொழிலாளர்களிடையே விடுதலை வேட்கை உருவாகி பெரியதோர் மறுமலர்ச்சி இதன் விளைவாக ஏற்பட்டது. மிகச் சீரிய மூத்த தொழிற் சங்கத் தலைவர்களான சர்க்கரைச் செட்டியார், ம. சிங்காரவேலர் ஆகியோரை தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபடச் செய்து அவ்வியக்கத்திற்குப் புதிய வலியும் பொலிவும் சேர்த்தார்.

மென்மையை, பெண்மையை, தாய்மையைப் பேணிப் போற்றியது இவர் செய்த மாபெரும் சமுதாயத் தொண்டாகும். பெண் கல்வியே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பது இவரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். ''பெண்ணின் பெருமை'' என்னும் இவரது நூல் ஒப்பற்ற வழிகாட்டியாக இன்றளவும் திகழ்கிறது.

குழந்தைத் திருமணத்தைக் கடுமையாகக் கடைசி வரைச் சாடியவர் என்ற பெயரும் இவரையே சாரும். வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்தார். கைம்மை மணத்தை வரவேற்ற பெருந்தகையாளர்.

டாக்டர் முத்துலெட்சுமி அவர்களின் தேவதாசி ஒழிப்பு மசோதாவுக்குப் பக்கபலமாகச் செயல் புரிந்தார். அவ்வாறே தீண்டாமையை ஒழிப்பதில் நேரடியாகச் செயல்பட்டார்.

தன் தாய்மொழியால் தமிழ் மீது அவருக்குத் தீராக் காதல். அவர் காலத்தில் அரியணையில் ஆங்கிலமும், ஆலயத்தில் வட மொழியும், இசையரங்கும் தெலுங்கில் மட்டுமே பாடிவந்தனர். இந்நிலையை மாற்றி அன்னைத் தமிழை அனைத்துத் துறையிலும் வளர்த்தார். தாய் மொழியில் தமிழர்களைப் பேச வைத்து அந்நிய மோகத்தைத் தணித்தார்.

இவரது தமிழ்நடை தென்றலாய் இன்றளவும் இனிக்கிறது. உள்ளத்தின் மேன்மையினை உலகறியச் செய்தார். 'ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்' என்ற ஆன்ம நேய ஒருமைப்பாடு கண்ட தமிழ் ஞானி.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களைப் போல நாட்டுப்பற்றும், மொழி உணர்வும், சமுதாய நோக்கும், இறை உணர்வும் கொண்ட ஒரு நடமாடும் பல்கலைக் கழகத்தைக் காண்பதரிது. அன்னாரின் கனவுகளை நனவாக்கி, தமிழன்னைக்கு முத்துமாலை சூட்டுவோம்.



# பொதுநலப் பூங்காவில் பூத்திட்ட புரட்சிமலர்!

— பி.வி. கிரி

சமுதாயத் தேரோட்டம்
சரியாக நடப்பதற்கு
அமுதான தமிழினிலே
அரியபல நூல்படைத்தார்!

இதயம் இனித்திடும்
இதழ்கள் நடத்தினார்
பக்குவமாய் சீர்திருத்தம்
பரவிடவே வகைசெய்தார்!

நானிலம் போற்றுகின்ற
நாவன்மை கொண்டிருந்தார்;
தேனினும் இனிதான
தெளிவுரைகள் பலசொன்னார்!

இளைய தலைமுறை
எழுச்சி கொளச்செய்தார்!
வளைய வந்தார்கள்
வாலிபர்கள் திரள்திரளாய்!

பொதுநலப் பூங்காவில்
பூத்திட்ட புரட்சிமலர்!
புதுமைகள் வாழ்விலே
புரிந்திட்ட சிறப்பியவர்!

எளிமையின் உருவாக
இறுதிவரை அவர்இருந்தார்
ஒளிநிறைந்த வாழ்வுக்கு
உதாரணம் அன்னாரே!



# சென்னை மாநகராட்சிச் செய்திகள்

## குடிநீர்ப் பரிசோதனை செய்ய பரிசோதனைக் கூடம்!

சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத் துறையின் சார்பில் ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள இரசாயனப் பகுப்பாய்வு (Chemistry Analyser) என்னும் மருத்துவக் கருவியையும், குடிநீர் பருகுவதற்கு ஏற்றதாக உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகப் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் ஆய்வுக் கூடத்தினையும் மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., முன்னிலையில் 8.7.93 அன்று ரிப்பன் மாளிகையிலுள்ள பொதுசுகாதாரத் துறையைச் சார்ந்த ஆய்வுக் கூடத்தில் தொடங்கி வைத்தார். மாநகராட்சியின் சுகாதாரத் துணை ஆணையர் திரு. ச.சந்திரமௌலி, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை துணை ஆணையர் திரு. வி. இராமகிருஷ்ணன், இ.கா.ப., சுகாதார அலுவலர் டாக்டர் கண்ணபிரான் மற்றும் பிற அலுவலர்கள் இதில் கலந்து கொண்டார்கள். இந்த இரு வசதிகளும் ரூ.12 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ரிப்பன் மாளிகையில் இயங்கி வரும் மாநகராட்சி பொது சுகாதார ஆய்வுக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த இரசாயனப் பகுப்பாய்வு (Chemistry Analyser), ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும். இக்கருவி இரத்தத்தில் உள்ள சர்க்கரை, கொழுப்பு ஆகியவற்றின் அளவு, சிறுநீரகத்தின் வேலைத்திறன், நாளமில்லாச் சுரப்பிகளின் வேலைத்திறன் ஆகியவற்றை எந்தவிதத் தவறுமின்றித் துரிதமாகத் தெரிந்து கொள்ள உதவும்.

இந்த வசதியைப் பொதுமக்கள் குறைந்த அளவே கட்டணம் செலுத்திப் பயன்படுத்திக் கொள்ளலாம். இக்கட்டணம் தனியார் பரிசோதனைக் கூடங்களில் வசூலிக்கும் கட்டணத்தைவிடப் பாதியாக இருக்கும்.

மேலே கூறப்பட்ட பரிசோதனைகளுடன் இ.சி. போன்ற பிற பரிசோதனைகளும் குறைந்த கட்டணத்தில் மாநகராட்சி பொதுசுகாதார ஆய்வுக் கூடத்தில் பொதுமக்கள் செய்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர்ப் பரிசோதனைக் கூடம்

குடிநீர் பருகுவதற்கு ஏற்ற வகையில் சுகாதாரமான முறையில் இருக்கிறதா என்பதைக் கண்டறிய, பரிசோதனைக் கூடம் ஒன்றும் மாநகராட்சியால் ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளது. உணவு விடுதிகள் மற்றும் பிற இடங்களில் அளிக்கப்படும் குடிநீர் பருகுவதற்கு ஏற்ப சுகாதாரமான முறையில் உள்ளதா என்பதைக் கண்டறிவற்காக இப்பரிசோதனைக் கூடம் மாநகராட்சியால் பயன்படுத்தப்படும்.

## குடியிருப்புகளில் கார் நிறுத்தும் இடங்கள்

சென்னை நகரில் குடியிருப்புகளில் அமைந்துள்ள பகுதிகளில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி நிறுத்துவதற்கான இடங்களை அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் தொலைபேசி செய்தி பெறும் வசதியும் செய்துதர மாநகராட்சி எண்ணியுள்ளது. இதனால் பொதுமக்கள் சிரமமின்றி வாடகை வண்டிகளை ஏற்பாடு செய்து கொள்ள இயலுவதுடன் ஆட்டோ டாக்ஸி ஓட்டுநர்களுக்கும் அதிக அளவில் சிரமமின்றி பயணிகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

இத்தகைய வண்டிகள் நிறுத்தும் இடங்களை அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்யும் பணியினை மாநகராட்சி தற்பொழுது மேற்கொண்டு உள்ளது. ஏற்கெனவே சில இடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

## சென்னை மாநகராட்சி பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

சென்னை மாநகராட்சிக் கல்வித் துறையின் சார்பில், மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான புத்துணர்ச்சி பயிற்சியினை 8.7.93 அன்று ரிப்பன் மாளிகையிலுள்ள கூட்ட அறையில் மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., தொடங்கி வைத்தார். விழாவிற்கு மாநகராட்சி ஆணையர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., தலைமை வகித்தார். கல்வித் துறை துணை ஆணையாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., சிறப்புரை வழங்கினார். அண்ணா பல்கலைக் கழகப் பாடத் திட்டத்துறையின் பேராசிரியர் டாக்டர் செல்வம், திரு. கே. பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். விழாவிற்கு வந்திருந்தவர்களை, மாநகராட்சி கல்வி அலுவலர் டாக்டர் மு. இராசாராம் வரவேற்று பேசினார்.

மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., பயிற்சியைத் தொடங்கி வைத்துப் பேசும்போது, கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் மாநகராட்சிப் பள்ளிகளில் பலவேறு அடிப்படை வசதிகளை ரூ.10 இலட்சம் செலவில் மாநகராட்சி செய்து வருகிறது. எனவே, ஆசிரியர்கள் தங்களுடைய கடமையை உணர்ந்து சிறப்பான முறையில் பணியாற்றி அதிக அளவில் ஏழை எளிய மாணவர்கள் தேர்ச்சிபெற முயற்சி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார். மாநகராட்சி ஆசிரியர்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவித்தால் அவற்றை நிவர்த்தி செய்ய மாநகராட்சி தயாராக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

சென்னை மாநகராட்சியின் ஆணையர் திரு. சா. அலாவுதீன், இ.ஆ.ப., தலைமை உரையாற்றும்பொழுது, தற்போது கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பலவேறு மாற்றங்களை மாநகராட்சி ஆசிரியர்கள் தெரிந்து கொள்வதற்காகவே இத்தகைய பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார். மேலும் தனியார் பள்ளிகள் போல நிதி வசூல் செய்யாமல் இலவசமாக மாநகராட்சிப் பள்ளிகள் ஏழை மாணவ மாணவிகளுக்குக் கல்வி வழங்கி வருகிறது. மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த கடந்த 1½ ஆண்டுகளில் பள்ளிகளில் ஆய்வகங்கள் அமைத்தல், மேசை நாற்காலி, சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இத்தகைய வசதிகள் செய்து கொடுத்தப் பின்னரும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தரம் சற்றுக் குறைவாக உள்ளது. இதனை உணர்ந்து இந்நிலையை மாற்ற மாநகராட்சி ஆசிரியர்கள் நல்ல ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாநகராட்சிக் கல்வித் துறையின் துணை ஆணையர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., தன்னுடைய சிறப்புரையில், இத்தகைய பயிற்சிகள் மாநகராட்சி ஆசிரியர்களுக்குத் தங்களுடைய பணியில் ஒரு ஆர்வத்தையும் கடமை உணர்வையும் ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் செல்வம் தன்னுடைய உரையில், இப்பயிற்சி ஆசிரியர்களின் அறிவுத்தன்மையை அதிகப்படுத்துவதுடன், பாடம் கற்பிப்பதில் புதிய முறையைக் கையாளுவதற்கும் உதவும் என்று தெரிவித்தார். ஏதாவது ஒரு மாநகராட்சிப் பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்த தாங்கள் பொறுப்பேற்பதாக அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் செல்வம் அறிவித்ததைத் தொடர்ந்து, சைதாப்பேட்டையிலுள்ள மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவை அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் கண்காணிப்பிற்காக அளிக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையின் உதவிக் கல்வி அலுவலர் திரு. ஜே.டி. கோயில்பிள்ளை நன்றி கூறினார். ஒருநாள் நடைபெற்ற இப்பயிற்சியில் மாநகராட்சிப் பள்ளிகளில் பணி புரியும் 60 பட்டதாரி ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்.

## அண்ணா போற்றிய பெருமக்கள்

### காந்தியடிகள் காலத்தின் சின்னம்!



அண்ணல் காந்தியடிகள் ஓர் தூயவர். நமது மார்க்கத்தில் மாசு துடைத்திட வந்த மகான் - என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்,

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைப் பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்,

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பலவேறு வகையினர் உளர். இவர்களின் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

— பேரறிஞர் அண்ணா.

# சென்னையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா



தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா, 26.8.93 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு சா.பா. இளங்கோவன், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

''திரு.வி.க. ஒரு துறையில் மட்டும் வல்லுநர் என்று வரையறுத்துச் சொல்லமுடியாது. அவர், பல்துறை வல்லுநராக விளங்கினார். வாழ்நாள் முழுவதும் தியாக வாழ்வாக - எளிமை இனிமை பொதுமை கலந்த வாழ்வாக வாழ்ந்தவர். திரு.வி.க. தொடாத துறை இல்லை. சமரச சன்மார்க்கத்தைத் தம் வாழ்வாகக் கருதியவர். எளிய தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர். தொழிலாளர் நலனில் ஆர்வங் காட்டி, அவர்களின் தலைவராகத் திகழ்ந்தவர்'' என்றார்.

பிறகு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், திரு.வி.க. விருது, பாவேந்தர் விருதுகள் வழங்கி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி, கம்பராமாயண ஆங்கில





# திரு.வி.க.

## தமிழால் உயர்ந்தவர்

## தமிழை உயர்த்தியவர்!



மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

திரு.வி.க. விருது, பேராசிரியர் டாக்டர் தி. முத்துக்கண்ணப்பன் அவர்களுக்கும், பாவேந்தர் விருது, புலவர் பெ.ஆ. இளஞ்செழியன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இருவருக்கும் பொன்னாடை போர்த்தி, பத்தாயிரத்துக்கான பண முடிப்பும் வழங்கப்பட்டது.

வெளியிடப்பட்ட நூல்களின் முதற்பிரதிகளை, விருது பெற்ற இருவரும் பெற்றுக்கொண்டனர்.

கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பேராசிரியர் பி.எஸ். சுந்தரம் அவர்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, டாக்டர் தி. முத்துக்கண்ணப்பன், புலவர் இளஞ்செழியன் ஆகியோர் பேசினார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''பாவாணர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்து, தனித்தமிழை நிலைநாட்டப் பாடுபட்டவர்கள் ஆவார். அகர முதலியை உருவாக்குகின்ற முழுத் தகுதி பாவாணருக்கு இருந்தது. அவரைத் தொடர்ந்து, அவரோடு நெருங்கிப் பழகிய மதிவாணன் அவர்கள் இப்பணியைத் தொடர்ந்து, இந்நூல்கள் வெளிவருகிற பெரும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

''கம்பராமாயண 12,500 செய்யுள்களில், 600-க்கு மேற்பட்ட குறள் கருத்துக்கள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. 48 விலங்குகளின் பெயர்களும், 70 மரங்களின் பெயர்களும், 24 மீன் வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் தமிழ்நாட்டுக்குரிய பெயர்களாகும்.

''திரு.வி.க. தமிழால் உயர்ந்தவர்; தமிழை உயர்த்தியவர். அடக்கம், அமைதி, ஆழ்ந்த புலமை, பொது நோக்கு முதலான தன்மைகளைக் கொண்டிருந்தவர். சன்மார்க்கம் (உண்மை நெறி) என்னுடைய நெறி என்று சொன்னவர்.

''திரு.வி.க. அவர்களின் நூல்களை இளைஞர்கள் - மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும்''.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு ஆ. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி நவின்றார்.




— நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.வி. கிரி




## ஏழ்மை நிலையிலிருந்து ஏற்றம் பெற...

**ப**சிக்கும் குழந்தையின் அழுகுரல், கணவன் அகால மரணம், வீட்டின் அடுத்தவேலை சாப்பாட்டுக்கு அலையும் அபலை நெஞ்சங்கள், வயலில் வியர்வை சிந்த உழைத்து ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே போதாத ஊதியம், விதியின் சதியால் வாழ்க்கையை வேறு பாதைக்கு மாற்றிய மகளிர், கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் சாப்பாடே வாழ்க்கையெனப் பழக்கப்பட்ட குழந்தைகள் இவையனைத்தும் ஒரு கிராமத்தின் பொருளாதாரச் சீர்குலைவால் ஏற்பட்ட சிதைவுகள்!

கிராம ஏழ்மை நிலை நினைவில் கொண்டு மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் உருவாக்கப்பட்டு, செயல்படும் திட்டம் கிராம மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தான், 'டோக்ரா' திட்டமென அழைக்கப்படுகிறது.

இத்திட்டம் மத்திய அரசின் முயற்சியாலும் மாநில அரசின் மேற்பார்வையிலும் 1983-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 50 மாவட்டங்களில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டதில், தமிழகத்தில் பெரியார் மாவட்டமும் ஒன்று. இத்திட்டத்தில் வட்டாரங்களில் பெண்கள் குழுக்களாக அமைக்கப்படுவர். ஒரு குழுவில் 5 முதல் 20 பெண்கள் உறுப்பினர்களாக இருப்பர். இந்த உறுப்பினர்களில் ஒருவர் அக்குழுவுக்குத் தலைவியாகத் தேர்வு செய்யப்பட்டு அக்குழுவினர் சுயமாகத் தொழில் செய்ய மாவட்ட நிர்வாகம் அனைத்து உதவியும் செய்யும்.

இத்திட்டம் பெரியார் மாவட்டத்தில் முதலில் 20 வட்டாரங்களிலும் செயல்படுத்தினாலும், ஆரம்ப காலத்தில் பெருந்துறை, பவானி வட்டாரங்களில் மட்டுமே இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு, இன்று படிப்படியாக வளர்ந்து 705 மகளிர் குழுக்கள் மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 680 மகளிர் குழுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின் பேரிலும், ஊக்குவிப்பினாலும் நன்றாகச் செயல்பட்டு, அந்தப் பகுதிகளுக்கேற்பத் தொழில் செய்து, தமிழகத்திலேயே இம்மாவட்டம் சாதனை படைக்கிறது.

இத்திட்டத்தால் இதுவரை 10,980 மகளிர் பயன் அடைந்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள் 5,528 ஆகும். இம்மாவட்டத்தில் இதுவரை 366 இலட்சம் செலவிடப்பட்டு, மானியமாக ரூ.127.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 14 பல்நோக்குக் கூடாரம் கட்டப்பட்டுள்ளது. இதைத் தொழில் கூடாரமாகவும், குழந்தைகள் காப்பகமாகவும், மகளிர் குழுக்கள் கூட்டம் நடத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

'அஞ்சலி' மசாலாப் பொடி என்ற பெயரில் சாம்பார் தூள், மிளகாய்த் தூள், இட்லிப் பொடி, சிக்கன் மசாலா, பருப்புப் பொடி, ரசப் பொடி, போன்ற மசாலாப் பொடிகள் தயாரிக்கப்பட்டு, ஆண்டிற்கு 10 இலட்சம் ரூபாய் வரை விற்பனை செய்கிறார்கள். இந்த மசாலாப் பொடி மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சத்துணவு மையங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

'மின்மினி' என்ற பெயரில் வாஷிங் பவுடர் காங்கேயம்,கோபி போன்ற வட்டாரங்களில் தயாரிக்கப்பட்டு, விற்பனைத் தொகை ரூ.1.5 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. 'லிக்யுட் ப்ளு' என்ற பெயரில் சொட்டு நீலம்

# கடலூர் மாவட்டத் தொழில் மையம்

கடலூர் மாவட்டத் தொழில் மையம், 1978-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆண்டுதோறும் குறியீடுகளின் அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை இது நிறைவேற்றி வருகிறது. அதன் வளர்ச்சிப் பணிகள் குறித்த விவரங்களும் 1992-93-ஆம் ஆண்டு 28.2.93 வரை அடைந்த சாதனைகளும் அடங்கிய தொகுப்பு இது.

சிறு தொழில் பதிவு: சிறு தொழில் தொடங்கும் திட்டத்துடன் ஒரு முனைப்பாளர் முயற்சிகள் மேற்கொள்ளும் நிலையில் தற்காலிகப் பதிவும் தொழில் தொடங்கி நடத்துவதற்கான ஆயத்தங்கள் யாவும் முடிக்கப்பட்ட பின்னர் அல்லது தொடங்கப்பட்ட பின்னர் நிரந்தரப் பதிவும் செய்யப்படுகின்றன. இவ்வாறு பதிவுகள் செய்யப்படுவதன் மூலம், சிறு தொழில்கள் அரசு வழங்கும் சலுகைகள் - உதவிகள் ஆகியவற்றைப் பெறத் தகுதி பெறுகின்றன.

தற்காலிகச் சிறுதொழில் பதிவு: 2,933; நிரந்தரச் சிறுதொழில் பதிவு: 918; கைவினை மற்றும் குடிசைத் தொழில் பதிவு: 508; ஊரகத் தொழிற்கடன் (தொழில்முனைப்பாளர் முதலீட்டுக் கடன்) ரூ.1.75 இலட்சம்; வட்டியில்லா விற்பனை வரிக்கடன்/விற்பனை வரியைத் தள்ளி வைத்தல் - செலவிடப்பட்டத் தொகை: 0.32 இலட்சம்; விற்பனை வரியைத் தள்ளிவைத்தல்: 5 நிறுவனங்களுக்கு ரூ.38.30 இலட்சத்திற்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் தொழில் முதலீடு மானியம் - ஒதுக்கீடு: ரூ.7.53 இலட்சம்; மின் கட்டண மானியம் - ஒதுக்கீடு: ரூ.3.36 இலட்சம்.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

10-ஆம் வகுப்பு வரை படித்த வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் சுயமாகத் தொழில் தொடங்க வங்கிகள் மூலம் கடன் வழங்குதல், இத்திட்டத்தின் கீழ், 1992-93-ஆம் ஆண்டிற்கான பயனீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாண்டிற்கான குறியீடு 450. 28.2.93 வரை 750 பயனீட்டாளர்கள் ரூ.131.33 இலட்சத்திற்கு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டு உள்ளனர்.

பெண்கள் பயிற்சி முகாம்: 1992-93-ஆம் ஆண்டு 40 பெண் தொழில் முனைவோர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட பெண் தொழில்முனைவோர்களுக்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்று தொழில் தொடங்க ஆவன செய்யப்படுகிறது.

---

டி.என். பாளையம், சத்தி வட்டாரங்களில் தயாரிக்கப்பட்டு ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 'விநாயகா அகர்பத்தி' என்ற முத்திரையில் வாசனைப் பத்தி தயாரிக்கப்பட்டு ஆண்டிற்கு ரூ.1.5 இலட்சம் ரூபாய்க்கு உற்பத்தி செய்யப்படுகிறது. காலணித் தயாரிப்பில் ஆண்டிற்கு ரூ.3.5 இலட்சம் விற்பனை செய்யப்படுகிறது.

ஈரோடு, கொடுமுடி, பெருந்துறை, சத்தி போன்ற வட்டாரங்களில் உள்ள 24 மகளிர் குழுக்கள் மொத்த வியாபாரிகள் கொடுக்கும் துணிகளைப் பயன்படுத்தி ஆடைகள், தயாரித்துக் கொடுப்பதில் கூலியாக மாதத்திற்கு ரூ.40,000 பெறுகிறார்கள். அலுவலகத்திற்குத் தேவைப்படும் பேப்பர் கவர்களைத் தயாரித்து விற்பனை செய்வதில் மாதம் ரூ.15,000 இலாபம் பெறுகிறார்கள். காளான் வளர்ப்பிலும், முயல் வளர்ப்பிலும் பெரியார் மாவட்ட மகளிர் குழுக்கள் சிறந்த முறையில் செயல்பட்டு நல்ல இலாபத்தை ஈட்டுகிறார்கள்.

பவானிசாகர் வட்டாரம் தொட்டம்பாளையத்திலும், சத்தியமங்கலம் வட்டாரம் சதுமுகையிலும், கோயா பட்டைக் கொண்டு அழகிய வேலைப்பாடுகளுடன் கோயா புடவை தயாரிக்கப்படுகிறது. இந்தப் புடவைகள் வட மாநிலங்களில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற ஊரக வளர்ச்சிப் பொருட்காட்சியில் மட்டும் பெரியார் மாவட்டத்தில் தயாரான புடவைகள் ரூ.27,000-க்கு விற்பனையானது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் தீவிர முயற்சியால், சித்தோடு தேசிய பால் பெருக்கத் திட்டப் பயிற்சி மைய வளாகத்தில், ஜூலை 27 முதல் 31-ஆம் தேதி முடிய 'டோக்ரா' கருத்தரங்கம் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரா. கண்ணன், இ.ஆ.ப., மகளிர் குழுக்களுக்கும், கிராமத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணறு, குடிநீர்ப் பராமரிப்பு மேற்கொள்ள பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது' என்றார்.

இந்தியாவிலேயே ரூ.5 கோடிக்கு வரவு செலவு நடக்கிற திட்டமானது பெரியார் மாவட்ட 'டோக்ரா' திட்டம் தான் என்று பெயர் சொல்லும் அளவிற்கு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

**ஜி.டி. மோகன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்.**



இராமநாதபுரம் மாவட்டம்

# குடிநீர்ப் பிரச்சினை தீர....

**மா**ண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு செல்வகணபதி, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு சத்தியமூர்த்தி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு தென்னவன் ஆகியோர் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைக் குடிநீர் வாரியச் செயலர், நிர்வாக இயக்குநர் (குடிநீர் வடிகால் வாரியம்), உதவிச் செயலர், பொறியியல் இயக்குநர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்); தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தென் மண்டலம் ஆகியோருடன் 24.8.93 அன்று காலை விவாதித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்குவதற்காக உவர்ப்பு நீரைக் குடிநீராக்கும் 40 ஆலைகளை, நிறுவுவதற்காக ரூ.53 கோடி இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அளித்துச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்.

இப்பணிகளை உடனடியாக நிறைவேற்ற அரசு அதிகாரிகளுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இப்பணிகளை நிறைவேற்ற பெல் (பி.எச்.இ.எல்) நிறுவனத்திடம் திட்டம் தீட்ட வாரியப் பொறியாளர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனத்துடனும் கலந்து உடனடியாக திட்டங்கள் தயாரிக்கும்படி ஆணையிட்டுள்ளார்.

கடலாடி மற்றும் முதுகுளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாகியும், இன்னும்

## அண்ணா கலையறிந்தவர்!



அண்ணாத்துரை கலையறிந்
தவர்! தமிழ்நாட்டின் பழைய நிலை
யறிந்தவர். ''மன்னும் இமயமலை
எங்கள் மலையே'' என்று மார்
தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழ
கத்தில் இன்று கோழைகளாய்,
மோழைகளாய் நாம் குன்றலாகாது;
காளைகளாய்க் களிறுகளாய் வாழ்
தல் வேண்டும் என்று ஆசைப்படு
கின்றவர் அவர். தமிழ்க் குலத்தை
அரிக்கும் வேர்ப் புழுக்களை அழித்
தாலன்றித் தமிழகம் தழைக்கு மாறி
ல்லை; ஊழ்வினையே பேசி ஆன்
வினை யற்றிருக்குமளவும் நாம்
உய்யுமாறில்லை என்று உறுதியாகக்
கருதுகின்றவர் அவர்.

— சொல்லின் செல்வர்
ரா.பி. சேதுப்பிள்ளை

# பட்டம் பெறுவது எதற்கு?



பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர் ஆம். ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர் பாராட்டுக்குரியீர். ஐய மில்லை, ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித் திடவா? அன்றிப் பணி செய்திடக்கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப் பட்டம் பயன்பட இருக் கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சி யுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனை, பன் மடங்கு பெருக்கி, பார்மகிழத்தருவதற்கே சூல்கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம். தன் தோகைகளை விரித் துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித் திடவா? பிறர் காண; பிறர் மகிழ! தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயா அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கிறாள்? இல்லை - மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திரு விளக்கு எதற் காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர், திருவிளக்கு-பொற்குவியல்-புள்ளிக் கலாப மயில் - கார்மேகம் - நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள், இசைபாட மக்கள் வாழ உமதாற் றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையயோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல் கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு. நாட்டின் பொது வுடமை நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற் பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர்.

— பேரறிஞர் அண்ணா

(மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் 7.9.1967-இல் ஆற்றிய உரையிலிருந்து)

நிறைவேற்ற இயலாமை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதித்தார். மேற்படி திட்டத்தின் மூலம் கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் சாயல்குடி கிராமங்களுக்கு வரும் அக்டோபர் மாத இறுதிக்குள், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் குடிநீர் வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள்.

இராமநாதபுர மாவட்டத்தில் இயங்கி வரும் 62 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே ஏற்று அனைத்துக் குடியிருப்புகளுக்கும் உடனடியாகக் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர், வைகை ஆற்றிலிருந்து நேரடியாகக் குழாய் மூலம் இராமநாதபுரம் மற்றும் வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் கொண்டுவர சாத்தியக் கூறுகள் என்னென்ன உண்டென ஆராய்ந்து விரிவான திட்டங்கள் தயாரிக்குமாறு ஆணை வழங்கினார்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், சக்கரைக் கோட்டை கண்மாயைப் போதிய அளவு ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் மழை நீரைத் தேக்கி வைத்தால் கோடைக்காலங்களில் குடிநீர் வழங்க வசதியாக இருக்குமென்று தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறைச் செயலர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கண்மாய்கள், ஊருணிகள் மற்றும் நீர்வரத்து வடிகால் ஆகியவற்றை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும், மழைக்காலங்களில் மழை நீரைத் தேக்கி வைத்துக் கோடைக்காலங்களில் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

இவ்வாணைகளை உடனடியாகச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் 26.8.93 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் முகாமிட்டு மேற்படி பணிகளை நேரடியாகப் பார்வையிட்டு, விரைந்து அவற்றைச் செயல்படுத்தி முடிக்க ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

# வேளாண்மைத் துறை மூலம் விரைவான பணிகள்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், வேளாண்மைத் துறை மூலம் 1992-93-ஆம் ஆண்டில் 1,05,610 எக்டேரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு 4,17,700 மெ. டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. சிறுதானியங்கள் 7,740 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 20,250 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டது. பயறு வகைப் பயிர்களைப் பொருத்தமட்டில் இதுவரை காணப்படாத வகையில், 37,843 எக்டேரில் சாகுபடி செய்து, 19,091 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டது. அதேபோல், எண்ணெய்வித்துப் பயிர்களிலும் குறிப்பிடத்தக்க சாதனையாக 19,419 எக்டேரில் பயிர் செய்யப்பட்டு 21.930 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டது.

1992-93-ஆம் ஆண்டில், முதன் முதலாக சோயாமொச்சை 377 எக்டேர் பரப்பில் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது.

1992-93 நிதியாண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட பொருள் மற்றும் நிதி இலக்குகள் குறைவின்றிச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டிற்கு, இம்மாவட்டத்திற்கான உணவுத் தானிய உற்பத்தி இலக்கு 5.0 இலட்சம் மெ. டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கினைச் சாதனை புரிந்திட, அரிசி உற்பத்தியில் எக்டேருக்கு 6 மெ. டன்னும், சிறு தானியங்கள் உற்பத்தியில் எக்டேருக்கு 3.0 மெ. டன்னும் உற்பத்தி செய்திடப் பல வழிகளிலும் முனைப்புடன் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பயறு வகைப் பயிர்களில் எக்டேருக்கு 0.660 மெ. டன்னும், பருத்தியில் 3 பேல்கள், கரும்புப் பயிரில் 12.5 மெ. டன் வெல்லம், நிலக்கடலையில் 1.5 மெ. டன், எள் பயிரில் 0.5 டன், சூரியகாந்திப் பயிரில் 0.7 மெ. டன், சோயாமொச்சைப் பயிரில் 1.0 மெ. டன் உற்பத்தி செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1993-94-ஆம் நிதியாண்டில் சிறுகுறு விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டங்கள், ஆதி திராவிட விவசாயிகளுக்கான நலத் திட்டங்கள் மற்றும் ஏனைய நலத் திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன.

**ஒருங்கிணைந்த அரசி உற்பத்தித் திட்டம்**

அரிசி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் (விதைகள் பயிர்ப் பாதுகாப்பு மருந்து, களைக்கொல்லி, சிங்சல்பேட் போன்றவை) 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட உள்ளன.





## புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

**சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான சிறப்பு உதவித் திட்டங்கள்**

**தார்ப் பாய்கள் விநியோகம்.**

இத்திட்டத்தின்கீழ் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் (அதிகபட்சம் ரூ.1000/நபர்) தார்ப்பாய்கள் விநியோகிக்கப்பட உள்ளன. இம்மாவட்டத்தில் 900 எண் ஒதுக்கீடு பெறப்பட்டு விநியோகித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மேம்படுத்தப்பட்ட டயர் வண்டி விநியோகம்**

இத்திட்டத்தின்கீழ், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் மேம்படுத்தப்பட்ட டயர் வண்டிகள் (அதிகபட்சம் ரூ.7,500/நபர்) விநியோகிக்கப்பட உள்ளது. இம்மாவட்டத்திற்கு 200 எண். ஒதுக்கீடு பெறப்பட்டு விநியோகித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறிய இயந்திர உழுவை ஒன்றுக்கு ரூ.30,000 மானியத்தில் 25 எண் சிறிய இயந்திர உழுவை வழங்கப்பட உள்ளது.

பவர் டில்லருக்கான இழுவை வண்டி ஒன்றுக்கு ரூ.10,000 மானியத்தில் 45 எண் விநியோகிக்கப்பட உள்ளது.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் (அதிகபட்சமாகக் கருவி ஒன்றுக்கு ரூ.500 மானியம்) 3,000 வேளாண் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

பல்வேறு பயிர்களுக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அடங்கிய கிட்டுகள், பல்வேறு பயிர்களுக்கு ரூ.200 மதிப்பிற்கு 5310 மினிகிட்டுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் விசைத் தெளிப்பான்கள் 150 எண் வழங்கப்பட உள்ளது.

மேலும், ஏனைய திட்டங்களான சிறப்பு உணவுத் தானிய உற்பத்தித் திட்டங்கள் எண்ணெய்வித்துகள் உற்பத்தித் திட்டம், தேசிய பயறு வகை மேம்பாட்டுத் திட்டம், வேளாண் காடுகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களும் வேளாண் பெருமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளன.

மேலும், இம்மாவட்டத்திற்கு நடப்பு காரீப் பருவத்திற்குத் தேவைப்படும் விதைகள், உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் போன்ற இடுபொருட்க்ள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தனிமையில் வாழும் பெண்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டு நிர்கதியாக நிற்கும் பெண்கள் ஆகியோர்களுக்கு வீட்டு வசதி - மாண்புமிகு முதல்வர் ஆணை

தனிமையில் வாழும் பெண்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டு நிர்கதியாக நிற்கும் பெண்கள் ஆகியோர்களுக்கு உறைவிடம் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை நீக்குமுகமாக, அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக, அரசு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள், அடுக்கு வீடுகள் மற்றும் வீட்டு மனைகள் ஆகியவற்றில் 5 சதவிகிதம் ஒதுக்கி, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இவ்வகை ஒதுக்கீட்டின் கீழ் வீடு மற்றும் மனை பெற விரும்பும் கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் தனிமையில் வாழும் பெண்கள், அதற்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெறப்பட்ட சான்றிதழுடன் இணைத்து அரசுக்கு அனுப்பவேண்டும். சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான ஒதுக்கீட்டுக் குலுக்கல் வாரியத்தால் நடத்தப்பட்ட பிறகே இவ்வகையான விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்புதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ-ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23
தமிழரசு



